Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆடி 18 03-08-94 புதன்கிழமை ஓசை 166

## நேர்முகப் பரீட்சைக்கு தோற்றிய 416 பட்டதாரிகளுக்கு நியமனம்

யாழ் செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சையில் தோற்றிய பட்டதாரிகளில் 416 பேருக்கு நியமனங்கள் வழங்கப்படவுள்ளன. இவற்றுள் 274 பேருக்கான நியமனக் கடிதங்களை அரச அதிபர் எடுத்துவர உள்ளதாக நம்பகரமாகத் தெரியவருகின்றது மேற்படி பட்டதாரிகளுக்கு அரச நிர்வாக சேவையிலும் அதனோடிணைந்த சேவை மற்றும் ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படவுள்ளன. இதன்படி நிர்வாக மற்றும் சேவைகளுக்கு இந்நேர்முகத் தேர்வின் மூலம் 274 பட்ட (6ஆம் பக்கம் பார்க்க)

# விமானத்தளம் மீது ஊடுருவித் தாக்குதல்

# ஹெலிகொப்டர், பவள் முற்றாக அழிப்பு

## பலாலியில் கரும்புலிகள் வீரசாதனை

## விமானப்படையினருக்கு பலத்த உயிரிழப்பு

( யாழ்ப்பாணம் )

நேற்று அதிகாலை 2.45 மணியளவில் கரும்புலிகள் அணி ஒன்று பலாலி விமானப்படைத் தளத்தினுள் ஊடுருவி துணிகரத் தாக்குதல் ஒன்றை நடத்தியது. சிறிலங்கா படைத்தளங்களில் மிகவும் பாதுகாப்பானதெனக் கருதப்படும் பலாலி விமானப்படைத் தளத்தில் கரும்புலிகள் ஊடுருவி மேற்கொண்ட இத் தாக்குதலின்போது, பெல் ஹெலிகொப்டர் ஒன்று வெடித்துச் சிதறி தீப்பற்றி எரிந்து முற்றாக நாசமாகியது. விமானப் படைத்தளத்தில் நடைபெற்ற கடும் சண்டையின் போது கவசவாகனம் ஒன்றும் அழிக்கப்பட்டது. இந்த மோதலில் விமானப் படையினருக்கும், இராணுவத்தினருக்கும் பலத்த உயிர்ச் சேதமும் ஏற்பட்டது.

பலத்த பாதுகாப்பு அரண்களைக் கொண்ட பலாலி விமானப்படைத் தளத்தினுள் அதிகாலையில் ஊடுருவிய கரும்புலிகள் அணி விமானப்படைத்தளத்தின் மையப்பகுதி வரை ஊடுருவித் தாக்குதலை மேற்கொண்டது.

இத்தாக்குதலின் போது விடுதலைப் புலிகளினால் சிறிய ரக தானியங்கி ஆயுதங்களும், 'லோ' வகை எறிகணை செலுத்திகளும் பாவிக்கப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன,

விமானப் படைத்தளத்தின் மையப் பகுதிவரை ஊடுருவிய விடுதலைப் புலிகள் 'லோ' எறிகணை செலுத்தி மூலமே ஹெலிகப்டரைத் தாக்கியதாகவும். இத்தாக்குதலின் போது ஹெலிகொப்டர் வெடித்துத் சிதறித் தீப்பற்றி எரிந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அத்தோடு, விமானப் படையினர் பயன்படுத்திய பவள் கவச வாகனமும் முற்றாக நாசமானதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(6 ஆம் பக்கம் பார்க்க)

பெல் ரக உலங்கு வானூர்தி



விமான ஓட்டுநரையும் 14 வரையிலான பயணிகளையும் ஏற்றிச்செல்லக் கூடிய இவ் உலங்குவானூர்தி வாலுக்கு ஆதாரமான நீண்டபகுதியில் பயணிகளின் பொதிகளையும் ஏற்றிச்செல்லக் கூடியது. 17.5 மீற்றா நீளமும் 4,5 மீற்றர் உயரமும் 2.75 மீற்றர் அகலமும் உடையது. முன்னும் பின்னுமாக இரு பக்கமும் நான்கு கதவு

# இருமணிநேரம் நடந்த கடும்மோதல்

(யாழ்ப்பாணம்)

பலாலி விமானப் படைத்தளத்தினுள் ஊடுருவிய விடுதலைப் புலிகளின் கரும்புலிகள் அணிக்கும் சிறிலங்கா இரா

இம்மோதலின்போது சிறிலங்கா விமானப்படை மற்றும் இராணுவத்தைச் சேர்ந்த பல படையினர் கொல்லப்

(யாழ்ப்பாணம்)

பலாலி விமானப் படைத்தளத்தினுள் ஊடுருவிய விடுதலைப் புலிகளின் கரும்புலிகள் அணிக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் இரண்டு மணிநேரத்திற்கும் மேலான கடும் மோதல் நடந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன-

இம்மோதலின்போது சிறிலங்கா விமானப்படை மற்றும் இராணுவத்தைச் சேர்ந்த பல படையினர் கொல்லப்பட்டதாகவும், பலர் காயமடைந்ததாகவும் தெரியவருகிறது-

இம்மோதல் இடம்பெற்றதை சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் ஊர்ஜிதம் செய்தன.

# இரு விமானங்கள் தப்பி ஓட்டம்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளின் கரும்புலிகள் அணி பலாலி விமானப் படைத் தளத்திற்குள் ஊடுருவித் தாக்குதல் மேற்கொண்டபோது அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த குண்டுவீச்சு விமானங்கள் தப்பி ஓடின-

விமானப்படைத்தள ஓடுபாதைக்கு அருகில் விமானங்கள் நிறுத்தி வைக்கப்படும் இடத்தில் இருந்த இரு குண்டுவீச்சு விமானங்களே தப்பி ஓடியவையாகும்-

## பலாலித் தளத்தினுள் பெரும் பரபரப்பு

(யாழ்ப்பாணம்)

கரும்புலிகள்விமானப்படைத் தளத்தினுள் ஊடுருவியதைத் தொடா்ந்து அங்குபெரும் பதற்ற நிலை ஏற்பட்டதாகத் தெரியவருகின்றது-

பாதுகாப்பு அரண்களில் இருந்து பல கிலோமீற்றர்கள் விடுதலைப் புலிகள் ஊடுருவி மத்திய பகுதிக்குள் தாக்குதல் நடத்தியபோதே இப்பதற்ற நிலைஏற்பட்டதாகவும்,அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்கள் பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும், அதிகாரிகளின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## குறுக்கும் நெடுக்குமாக பறந்த விமானங்கள்

(யாழ்ப்பாணம்)

பலாலி விமான நிலையத்தை அண்டிய இடங்களுக்கு மேலாலும் யாழ். குடாநாட்டின் ஏனைய பகுதிகளுக்கு மேலாலும் நேற்று விமானப் படைக்குச் சொந்தமான விமானங்கள் குறுக்கும் நெடுக்குமாக பறந்து திரிந்ததை அவதானிக்க முடிந்தது.

அதிகாலையிலிருந்து முற்பகல் வரை இருவிமானங்கள் யாழ் நகரை அண்டிய பகுதிகளுக்கு மேலால் பறந்து திரிந்தன.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று ஆரம்பம்

இன்று தொடக்கம் மோட்டார் ஊர்திகளுக்குரிய 94-ம் ஆண்டு வரிஅட்டை 1.8.94ம் திகதி பத்திரிகைச் செய்தியில் குறிப்பிடப்பட்ட அலுவலகங்களில் சம்பந்தப்பட்ட உதவி அரச அதிபர் பிரிவைச் சேர்ந்த மோட்டார் ஊர்தி உரிமையாளர்களுக்கு வழங்கப்படும் என்பதை போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவின் மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினர் அறியத்தந்துள்ளனர்.

# பலாலி தளம் மீதான தாக்குதல்

# அபாயம் இன்னும் நீங்கவில்லை

## இராணுவ அதிகாரி தகவல்

(கொழும்பு)

பலாலி இராணுவத் தளத்தினுள் ஊடுருவியுள்ள விடுதலைப் புலிகளில் இன்னமும் சுமார் பத்துப் பேராவது முகாம் பகுதிகளில் ஒளிந்து கொண்டிருக்கலாம் என்று பலாலி இராணுவ முகாமிலுள்ள இராணுவத்தினர் அச்சம் தெரிவித்துள்ளனர்-

அவர்கள் மேலும் கூறுகையில் பலாலி இராணுவமுகாம் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தும் அபாயம் இன்னமும் நீடிக்கிறது என்றும், மேலும் சுமார் 24 மணி நேரத்திற்காவது இந்நிலை நீடிக்கக் கூடும் எனவும் தெரிவித்துள்ளனர்,

## பலாலி தளத்தை முற்றாக அழிப்பதேபுலிகள்நோக்கம்

(லண்டன்)

யாழ் குடா நாட்டின் முக்கிய கூட்டுத் தளமாக அமைந்துள்ள பலாலி முகாமை முற்றாக அழிப்பதே விடுதலைப் புலிகளின் நோக்கமாக இருந்தது என சிறிலங்காவின் பாதுகாப்பு அமைச்சு உயரதிகாரி ஒருவர் பி. பி. ஸிக்கு தெரிவித்தார்.

எனவே விடுதலைப் புலிக

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

---

பொதிகளையும் ஏற்றிச்செல்லக் கூடியது. 17.5 மீற்றா நீளமும் 4,5 மீற்றர் உயரமும் 2.75 மீற்றர் அகலமும் உடையது. முன்னும் பின்னுமாக இரு பக்கமும் நான்கு கதவுகள், நெருக்கடி காலத்தில் வெளியேறுவதற்கான வழிகள என்பவற்றை இது கொண்டுள்ளது. தரையிலிருந்து நிமிடத்திற்கு 402 மீற்றர் என்ற வீதத்தில் மேலெழும்பும் திறன் கொண்டது. 3960 மீற்றர் உயரம்வரை மேலெழும்பக் கூடியது. ஆகக் கூடியது செங்குத்தாக 1430 மீற்றர் உயரத்திற்கு மேலெழும். அத்துடன் 1430 மீற்றர் உயரத்திலிருந்து தரையிறங்கும். 3350 மீற்றர் உயரத்தில் பறக்கும் போதும் அசையாது நிற்கும், 5080 இ. கிராம் வரையான நிறையை ஏற்றக் கூடியது.

# பாதுகாப்பு அதிகாரிகள் கொழும்பில் அவசர மாநாடு

(லண்டன்)

யாழ் குடாநாட்டின் முக்கிய படைத் தளமான பலாலி முகாமினுள் விடுதலைப் புலிகள் ஊடுருவி தாக்குதல் நடத்தியமை குறித்து ஆராய சிறிலங்காவின் இராணுவ உயரதிகாரிகள் நேற்று கொழும்பில் அவசர மாநாடொன்றை நடத்தியுள்ளனர்.

இம் மாநாட்டில் இராணுவத் தளபதி வடபகுதிஇராணுவத் தளபதி, யாழ் மாவட்ட இராணுவத் தளபதி உட்பட உயர் அதிகாரிகள் பலர் கலந்துகொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இம் மாநாட்டில் பலாலி படைத் தளத்தின் பாதுகாப்பை பலப்படுத்துவது குறித்து ஆராயப்பட்டது எனவும், பலாலி படைத் தளத்தை நேரில் சென்று பார்வையிடுவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

# இராணுவத் தளபதி ஜெரி டி சில்வா பலாலி தளத்திற்கு அவசர விஜயம்

## இராணுவ அதிகாரிகளுடன் மாநாடு

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் ஊடுருவித் தாக்கியதைத் தொடர்ந்துஇராணுவத்தளபதி ஜெரி டி சில்வாநேற்றுப்பகல்பலாலி இராணுவத் தளத்திற்கு அவசர விஜயமொன்றை மேற்கொண்டார்

கொழும்பில் நடைபெற்ற உயர்பாதுகாப்பு மாநாடு ஒன்றின் பின் பலாலிக்கு அவசர விஜயம் ஒன்றை மேற்கொண்ட ராணுவத் தளபதி ஜெரிடிசில்வா அங்கிருந்தஇராணுவ அதிகாரிகளுடன் அவசர மாநாடு நடத்தினார்

## ஹெலி தாக்குதல்

(வடமராட்சி)

தொண்டமானாறு கரையோரக் குடியிருப்புகள் மீது உலங்குவானூர்தி ஒன்று துப்பாக்கிப்பிரயோகம் செய்தது. பலாலியில் இருந்து நேற்றுப் பகல் 12.20 மணியளவில் இப்பகுதிக்கு வந்த இவ் உலங்குவானூர்தி பெரிய கடற்கரைசின்னக்கடற்கரைப்பகுதி குடியிருப்புகள் மீது பரவலாகச் சுட்டுவிட்டு பலாலி நோக்கிச் சென்றது- (யோ)

## கரும்புலிகள் விபரம் பின்னர் அறிவிக்கப்படும்

[யாழ்ப்பாணம்]

பலாலி விமானப் படைத்தளத்தினுள் ஊடுருவி வெற்றிகரமான தாக்குதலை மேற்கொண்ட கரும்புலிகள் தொடர்பான விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

## வரி விளம்பரம்

**விற்பனைக்குண்டு**

10×5 அடி நீளமுள்ள கூடொன்றும் சைனா பான் ரெயிலும் (வெள்ளை, கோப்பி) ஆண்சடை முயலொன்றும் விற்பனைக்குண்டு. த. செல்வக்குமார், சந்திரசேகரப்பிள்ளையார் வீதி, நல்லூர் வடக்கு. (8988)

**கண்டெடுக்கப்பட்டது**

நல்லூர் சாதனா பாடசாலை மைதானத்தில் சங்கிலி ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. தொலைத்தவர்கள் அதிபருடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளவும். (8998)

**விற்பனைக்குண்டு**

அலுஸ்ரேசன் நாய்க்குட்டி கறுப்பு நிறம் பெண் - 1½ மாதம் விற்பனைக்குண்டு. தொடர்பு- விஜி 125. ஐயனார் கோவில்வீதி, வண்ணார் பண்ணை யாழ்ப்பாணம். (8997)

**வியாழ மாற்றம் உங்களுக்கு எப்படி?**

வெளிவருகிறது! 4-10-94 இல் திகதி முதல் 'விண்ணில் வியாழமாற்றம் மண்ணில் உங்கள் யோகபலன்' சோதிடர் V.A. சிவராசா (வேலணை) 152B, அரசடி றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். [9004]

## பனை விதை நடுகை ஏற்பாடு

ஜெயபுரத்தில் அமைந்துள்ள ஐந்து ஏக்கர் தரிசு நிலக்காணியில் கற்பகச் சோலை திட்டத்தின் கீழ் பனை விதை நடுகை செய்வதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கையாக பூநகரி தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கம், மன்னார் மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பனை தென்னை வள அபிவிருத்திப்பகுதியுடன் இணைந்து செயற்படுத்தி வருகின்றது. இதன் முதற் கட்டமாக ஜெயபுர காணி தற்பொழுது திருத்தம் செய்...

---

யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச்சபை

## அறிவித்தல்

### கலந்துரையாடல் 3- 8- 1994

யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபையின் அனைத்து அங்கத்துவ சங்கங்களின் தலைவர்களுடனான கலந்துரையாடல் இன்று 3-8-94 புதன் கிழமை காலை 10 மணிக்கு யாழ் மாவட்டக் கூட்டுறவுச்சபை மண்டபத்தில் சபைத்தலைவர் வை- செந்திநாதன் அவர்கள் தலைமையில் நடைபெறும்- அனைத்து அங்கத்துவ சங்கத்தலைவர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்-

பதில் செயலாளர்

(சி-10026)

---

கட்டைவேலி - நெல்லியடி

ப. நோ. கூ. சங்கம்

## பதவி வெற்றிடம்

### பொதுமுகாமையாளர் - தரம் 101:6

சம்பளத்திட்டம்: 1305 - 60×4 - 75×11 - 2370-இத்துடன் அங்கீகரிக்கப்பட்ட சகல படிகளும் வழங்கப்படும்.

தகைமைகள்: (அ) கூட்டுறவுப் பணியாளரின் 07-வது சம்பளத் திட்டத்தில் முகாமை/ மேற்பார்வை மட்டத்திலான பதவியில் 03 வருடங்களுக்குக் குறையாத அனுபவம். அல்லது கூட்டுறவுப் பணியாளர் 08-வது சம்பளத் திட்டத்திலான பதவியில் மேற்குறித்த வண்ணம் 06வருட அனுபவம்.

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டத்துடன் அல்லது அதற்கு இணையான அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ தொழில்நுட்ப ஸ்தாபனமொன்றின் முகாமை மட்டத்திலான பதவியில் 04 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

(இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உயர் தரம்) க. பொ. த. (உயர்தரம்) இல் 03 பாடத்திலான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ தொழில் நுட்ப ஸ்தாபனமொன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 06 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

வயதெல்லை: 20-50 வயதுக்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். சங்கப் பணியாளருக்கு வயதெல்லையில் விலக்களிக்கப்படும்.

விண்ணப்பங்களுடன் தகைமைச் சான்றிதழ், அனுபவச் சான்றிதழ், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் ஆகியவற்றின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் யாவும் 31-08-94ஆந் திகதிக்கு முன்பாக 'தலைவர், கட்டைவேலி- நெல்லியடி ப.நோ கூ. சங்கம், கரவெட்டி' என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

---

## நிர்வாகசேவை பரீட்சை வயதெல்லை நீடிக்கப்படும்

இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான வயதெல்லையை 26 வயதில் இருந்து 31 வயது வரைநிர்ணயிப்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது.

இதற்கான அதிகாரம் மந்திரி சபையிடமிருந்துபெறப்படும் இடத்து தற்சமயம் இலங்கை நிர்வாக சேவை பரீட்சைக்கு இதுவரையும் விண்ணப்பிக்காமல் இருப்பவர்களுக்கு விண்ணப்பிப்பதற்கான கால அவகாசம் வழங்கப்படவுள்ளதாக அறியவருகிறது.

## 108 பரீட்சை நிலையங்களில் புலமைப் பரிசில் பரீட்சை

ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சை யாழ் மாவட்டத்தில் சுமார் 108 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நாடு முழுவதும் இப்பரீட்சை நடைபெறவுள்ளதென்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கான யாழ் மாவட்டத்திற்குரிய வினாத்தாள்கள் தற்சமயம் கொழும்பில் இருந்து யாழ் கல்வித் திணைக்களம் எடுத்துவரப்பட்டுள்ளது

---

## மண்ணெண்ணெய் விநியோகம்

இதுவரை ம. எ. எடுக்காதவர்கள் 4 - 08 - 1994 வியாழன் பி. ப. 1 மணி - 4 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

மாணவர் அவை
தொழில் நுட்பக்கல்லூரி
கொக்குவில்

9005)

---

## பணிநிலை வெற்றிடம்

பின்வரும் பணிநிலைக்கான விண்ணப்பங்கள் தகுதிவாய்ந்தவர்களிடமிருந்து கோரப்படுகின்றது.

1. மொழிபெயர்ப்பாளர்.
2. தட்டெழுத்தாளர் (தமிழ்)- ஆண்கள்

விண்ணப்பம் செய்ய விரும்புவோர் தமது சுய விபரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை 15-08-94-ம் திகதிக்கு முன்னர் கீழ்குறிப்பிடப்படும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

விளம்பர இல. 344
ஈழநாதம் பத்திரிகை நிறுவனம்
இல. 31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-10027)

---

## தனியார் கல்வி நிறுவனஒன்றியம்

யாழ். மாவட்டம்

## முக்கிய அறிவித்தல்

கல்வி நிறுவனம்
பொறுப்பேற்புக் கொண்டமை...

---

## நினைவு கூருகின்றோம்...

### 03-08-1994...

1988-ம் ஆண்டு இதேதினத்தில் இந்தியப்படையினர் கைதுசெய்ய முற்படுகையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**மகேந்தன்** ( - - முல்லைத்தீவு )

**பரதன்** ( - - யாழ்ப்பாணம் )

1990-ம் ஆண்டு மட்டு-பாலையடிவெட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**ஆனந்** (அருச்சுனன் ஜெகநாதன்-நாகமுனை, அம்பிலாந்துறை - மட்டு)

கிளிநொச்சி - பரந்தன் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**றிஸ்வான்** (சுந்தரம் - - கருப்பட்டைமுறிப்பு - முல்லைத்தீவு)

யாழ் - பலாலிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**கடற்புலி கப்டன் நெல்சன்** (இரத்தினம் ஜெயபாலசிங்கம் - மயிலிட்டி - யாழ்)

1991-ம் ஆண்டு ஆனையிறவு ஆ. க. வெ. நடவடிக்கையின்போது புல்லாவெளியிலிருந்து ஆனையிறவை நோக்கி முன்னேறிய சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். சுனேந்திரா** (ஜெயந்தினி வேலாயுதபிள்ளை - கல்குடா - மட்டு)

**கப்டன் சாரா** (இமானுவேல் ஜோன்சன்-உவர்மலை - திருமலை)

**கப்டன் திலகா** (ரதீஸ்வரி இராசதுரை - 6-ம் வட்டாரம், மூதூர் - திருமலை)

**2-ம் லெப். கென்றி** (சின்னராசா சிறிரங்கன்-6-ம் வட்டாரம், கும்புறுப்பிட்டி - திருமலை)

**வியலசுந்தரம்** (வீரசிங்கம் தெய்வநாயகம் -மேற்கு கொலனி, தம்பலகமம் - திருமலை)

**சிவா** (செல்லப்பிள்ளை தங்கத்துரை - பள்ளிக்குடியிருப்பு, தோப்பூர் - திருமலை)

**பாண்டியன்** (செல்வராசா சிவநாதன்-நாயன்மார் திடல், தம்பலகமம் - திருமலை)

**முத்துக்குமார்** (அருந்தவராஜா அங்கயற்கண்ணன் - 215, திருஞானசம்பந்தர்வீதி - திருமலை)

**குயணன்** (பரமகுமார் தியாகராஜா - 4-ம் குறுக்குத் தெரு - திருமலை)

**சஜீத்-தமீன்** (தம்பையா லோகநாதன் - 7-ம் வட்டாரம், மூதூர் - திருமலை)

**சர்வேஸ்** (முருகேசு தனேஸ்வரன் - பன்குளம் - திருமலை)

**ஹிட்லர்** (பத்தினியன் பரணிதரன்-மேன்கமம், மூதூர் - திருமலை)

**முகிலா** (தேவிகா ஞானப்பிரகாசம் - கண்டாவளை, பரந்தன் - கிளிநொச்சி)

**2-ம் லெப். நிசாந்தி** (லெட்சுமி வைத்திலிங்கம் - சாட்டுவளவு - வல்வெட்டித்துறை)

**2-ம் லெப். அருணா** (கோவிந்தசாமி அருளானந்தம் - மாதகல் மேற்கு - யாழ்)

**இன்பன்** (நடராசா றஞ்சித்குமார்-கச்சாய்வீதி, சாவகச்சேரி - யாழ்)

**பிரதீப்** (நாகமுத்து செல்வராஜா - புன்னாலைக்கட்டுவன் - யாழ்)

வள அபிவிருத்திப்பகுதியுடன் இணைந்து செயற்படுத்தி வருகின்றது. இதன் முதற் கட்டமாக ஜெயபுர காணி தற்பொழுது திருத்தம் செய்யப்பட்டு வருகின்றது.

எதிர் வரும் ஐப்பசி மாதம் நடுப்பகுதி அளவில் மேற்படி காணியில் பனை விதை நடுகை செய்யப்பட உள்ளது குறிப்பிடத்தக்கது.

## கால்நடைகளுக்கு இலக்கமிடல்

மன்னார் மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன விலங்குவேளாண்மை பகுதியினரால் கிராம சேவையாளர் ஊடாகவும் கால் நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்கங்கள் ஊடாகவும் கால்நடைகளுக்கு இலக்கமிடும் நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.

இதன் முதற்பகுதியாக முழங்காவில் பிரதேசத்தில் கிராஞ்சி பொன்னாவெளி, பல்லவராயன்கட்டு, முழங்காவில் ஆகிய இடங்களில் கால் நடைகளுக்கு இலக்கமிடல் நடவடிக்கைகள் முடிவடையும் நிலையில் உள்ளன.

## கழிப்பறைகள் அமைப்பு

பாடசாலைகளில் காணப்படும் சுகாதாரப் பிரச்சினையைக் கருத்திற்கொண்டு யாழ் செஸ்மேரிஸ் வித்தியாலயம், சுண்ணாகம் நாகேஸ்வரி வித்தியாலயம், உடுவில் மல்வம் றோ. க. த. க. பாடசாலை ஆகிய இடங்களில் தேச நிர்மாணிகள பிரமாண அடிப்படையிலான மூலதன ஒதுக்கீட்டு நிதியிலிருந்து கழிப்பறைகளை அமைத்துக் கொடுத்துள்ளனர்.

இதேபோல் இன்னும் பல பாடசாலைகளில் இவ்வாறு கழிப்பறை வசதிகள் செய்து கொடுப்பதற்கான நடவடிக்கைகளை தேச நிர்மாணிகள் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

விண்ணப்பங்கள் யாவும் 31-08-94ஆந் திகதிக்கு முன்பாக 'தலைவர், கட்டைவேலி-நெல்லியடி ப.நோ கூ. சங்கம், கரவெட்டி' என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

தலைவர்
கட்டைவேலி-நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்
(சி-10021)

**3 ஆம் ஆண்டு நினைவாக**

| தோற்றம்: | | வீரச்சாவு: |
|---|---|---|
| 16 | | 03 |
| — | | — |
| 01 | | 08 |
| — | | — |
| 1974 | | 1991 |



**2-ம் லெப். நிசாந்தி**
**(வைத்திலிங்கம் லெட்சுமி)**

புயலான பூந்தென்றல்கள்
எரிமலையான தண் நிலவுகள்
உங்கள் கனவுகள், இலட்சியபற்றுகள்
தமிழர் நெஞ்சமதில் நிலைத்திட-நீவிர்
உயர்ந்திடுவீர், நிலைத்திடுவீர்,
இத்தமிழீழமதில்.

காட்டுவளவு,
வல்வெட்டித்துறை,
(8996)

குடும்பத்தினரும்,
உறவினரும்,
நண்பர்களும்.

**முக்கிய அறிவித்தல்**

**கல்வி நிறுவனம் பொறுப்பேற்றுக் கொண்டமை**

எமது ஒன்றிய விதிகளை மீறியமைக்காக தனியார் கல்வி நிர்வாகப் பிரிவு விதித்த குற்றத் தொகையை பல சந்தர்ப்பங்கள் வழங்கியும் செலுத்தத் தவறிய,

**தென்மராட்சிக் கல்விக் கோட்டத்தில்**
**விஞ்ஞானக் கல்வி நிலையம்**

எமது ஒன்றிய மேற்பார்வையில் தனியார் கல்வி நிர்வாகப் பிரிவினால் பொறுப்பேற்றுக் கொள்ளப் பட்டுள்ளதையும்

அதன் இயக்குநர்
திரு. மா. சிவசுப்பிரமணியம்
(மணியம் மாஸ்ரர்)

எந்த தனியார் கல்வி நிறுவனத்திலும் கற்பிப்பதற்கான அனுமதியும் மறுக்கப்பட்டுள்ளதையும் மீறும் பட்சத்தில் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக

**தனியார் கல்வி நிர்வாகப் பிரிவு**
நடவடிக்கை எடுக்கவுள்ளது என்பதையும் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்

பொதுச் செயலாளர்,
யாழ். மாவட்டம்.
(சி-10025)

யாழ்.பல்கலைக்கழக(வெளிவாரி)விரிவுரைகள்

**கல்வியாண்டு 1994/95**

பின்வரும் பாடநெறிகளுக்கான
**புதிய பிரிவு**
விரிவுரைகள் 7- 8- 94இல் ஆரம்பமாகின்றன.

★ கலை முதற் தேர்வு (G.A.Q)
✶ வணிக முதற் தேர்வு (First in Com.)

விபரங்களுக்கு:
உதவிப் பதிவாளர்
**பட்டப்படிப்புகள் கல்லூரி**
148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-10010)

- மாதகல் மேற்கு - யாழ்)
**இன்பன்** (நடராசா றஞ்சித்குமார்-கச்சாய்வீதி,சாவகச்சேரி - யாழ்)
**பிரதீப்** (நாகமுத்து செல்வராஜா - புன்னாலைக்கட்டுவன் - யாழ்)
**தயா** (பாரதிதேவி செல்லையா-சிவன்பண்ணை வீதி, - யாழ்ப்பாணம்)
**சுபத்திரா** (வாணி புவனேந்திரன் - நறுவிலடி ஒழுங்கை - வல்வெட்டித்துறை)
**சுபாசினி** (புஸ்பரஞ்சினி சிவசுப்பிரமணியம் - காளிகோவிலடி, களபூமி - காரைநகர்)
**பவி** (புஸ்பசாகினி சிவசுப்பிரமணியம்- காளிகோயிலடி களபூமி - காரைநகர்)

மட்டு - சிறுத்தையன்கல் பகுதியில் சுகவீனம் காரணமாக எமைப் பிரிந்த,

**2-ம் லெப். சுந்தரேஸ்வரன்** (கணபதிப்பிள்ளை சந்திரன் - 1-ம் வட்டாரம், முனைக்காடு-மட்டு)

1992-ம் ஆண்டு மட்டு - கரடியனாறுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். சேந்தன்-நுகின்** (பொன்ராமன் புஸ்பராசா - கதிர்காமம் - அம்பாறை)
**லெப். விவேக்கா** (சத்யவாணி குணதுங்கா-குறிஞ்சிநகர், வாழைச்சேனை - மட்டு)
**லெப். நிரந்தரி** (ராஜேஸ்வரி தர்மலிங்கம் - சந்திவெளி, முறக்கொட்டாஞ்சேனை - மட்டு)
**கப்டன் நடேஸ்வரன்-நடேஸ்** (சிவகுரு சிறிகரன் - பெரியகல்லாறு - மட்டு)
**தமிழ்வதனன்-மயூரன்** (கந்தசாமி கருணராசா - நாசிவன்வீதி, வாழைச்சேனை-மட்டு)
**பெருமாள்-வில்வன்** (சித்திரவேல் யோகராசா - வெல்லாவெளி - மட்டு)

மட்டு - அம்பிலாந்துறையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**சிவதர்சன்-மதிகரன்** (கற்பூரப்போடி கோபாலப்பிள்ளை - குருக்கள்மடம் - மட்டு)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும், கடற்பரப்பிலும், சிறிலங்கா முப்படைகளினாலும், தேசவிரோதிகளாலும் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்.

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்.**


**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-10023)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளைநூலகம்

# 15 வயதிற்கு கீழ்ப்பட்டோர் கிரிக்கெட் போட்டி பற்றிக்சுடன் மோதிய யாழ்.இந்து சம்பியன்பட்டத்தை வென்றது

இவ்வருடம் யாழ் மாவட்டப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் நடாத்திய 15 வயதிற்குட்பட்டவர்களுக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் யாழ்- இந்துக் கல்லூரி வெற்றிக்கேடயத்தைச் சுவீகரித்துக் கொண்டது. இவ்வயதுப் பிரிவு அணிகளுள் யாழ்- இந்துக்கல்லூரி அணி சுற்றுப் போட்டியின் ஆரம்ப ஆட்டங்களிலேயே ரசிகர்களால் பலமானதொரு அணியாக இனங்காணப்பட்டிருந்தது. தம்மனுபவத்திலும் கூடியதொரு வெளிப்பாடு களத்தில காணப்பட்டதாக அபிப்பிராயம் நிலவியது. சாம்பியன்களான இவர்களை நேரில் கண்டு உரையாடியபோது இதற்கான காரணங்களையும் தெரிந்துகொள்ள



முடியுமாயிற்று. சரியான திட்டமிடலும் அது தொடர்பான செயற்பாடுகளுமே இவ்வணியின் வெற்றிக்குக் காரணம் என்பது புரிந்தது-

'1993இல் இக்கல்லூரியில் 13 வயதிற்குட்பட்ட ஒரு அணி உருவாக்கப்பட்டது- இதற்குப் பொறுப்பாக இருந்தவர்கள் திரு- பூபாலசிங்கமும் விளையாட்டுகளில் மிகவும் ஆர்வம் கொண்ட வித்தியாதரனும் ஆவர்-இன்றைய வெற்றியின் பெருமை அவர்கள் இருவருக்குமே முதலில் சேரவேண்டும்' என்கிறார்- தற்போதைய இவ்வணியின் பொறுப்பாசிரியரும் பயிற்றுநருமாகிய சண்- தயாளன் 20 பேர் தெரிவு செய்யப்பட்டதாகவும் அவ்விருபது பேருமே பயிற்சிக்கு ஒழுங்காக வருபவர்கள் என்பதும் வித்தி தன் வேலைகளுக்கு மத்தியிலும் இந்த அணியை முழு ஆர்வத்துடன் பயிற்சித்துக் கொண்டு வந்தார் என்பதும் '94இல் தயாளன் இவ்வணியைப் பொறுப்பேற்றுக் கொண்டார் என்பதும் உரையாடலின் போது தெரிந்தது.

வெற்றிக் கிண்ணத்தை நோக்கிய பாதையில் இவர்கள் 6 ஆட்டங்களைச்

ஒட்டங்களைப் பெற்றவர்கள் அல்லர். இறுதியாட்டத்தில் மீண்டும் சென். பற்றிக்ஸ் கல்லூரியை சந்தித்தபோது அதிகூடிய ஓட்டங்களாக 311/9 என்ற நிலையைப் பெற்றவர்கள். ஒருமுறை 10.2 ஓவர்களில் கொக்குவில் இந்துக் கல்லூரியை19 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் சரித்தவர்கள். இவ்வாறு இவ்வணியின் பலமான சாதனைப் பட்டியல் நீண்டு கொண்டே செல்கின்றது.

சிறந்ததொரு துடுப்பாட்ட வரிசையில் கார்த்திக்,பிரசன்னா(விக்கெட்காப்பாளர்) இருவரும் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்கள். தொடர்ந்து வரும் ஜோன்சன் ஆரம்பப் போட்டிகளில் தன் திறமையை நன்குவெளிப்படுத்தியவர். அணித்தலைவர் அரவிந்தன் 3 ஐம்பதுகளைப் பெற்றவர். இறுதியாட்டத்தில் 77 ஓட்டங்களைப் பெற்று சிறந்த துடுபபாட்ட வீரருக்கான பரிசைத் தட்டிக் கொண்டவர்.

இடதுகைத்துடுப்பாட்ட வீரராகிய திலீபன் 2 ஐம்பதுகளைப் பெற்றுக்கொண்டவர். நின்று நிதானித்து விளையாடும் இவர், தொடர்ச்சியாக சராசரியாக ஓட்டங்கள் பெற்றுக் கொண்டே வந்திருக்கின்றார். இவர் மிக நம்பகமானதொரு துடுப்பாட்ட வீரர். அணியின் அதிரடி வீரராக திகழ்கிறார் கிருஷ்ணரூபன்- இவர் களத்தில் இறங்கினால் நிச்சயம் ஆறுகள், இருக்கும்- அத்தோடு கடினமான காப்புப்பகுதியான ஸ்லிப்ஸ் பகுதியின் நம்பகமான வீரர்.

நம்பகமான துடுப்பாட்ட வீரராகிய திலீபன் அணியின் ஆரம்ப வேகப்பந்து வீச்சாளர்- இவரது மறுபுற சோடி அனோஜன்- அநேகமான ஆட்டங்களில் இவர்களே ஆட்டத்தை முடித்துக்கொடுத்ததை அவதானிக்கமுடிகிறது-இவர்களின் பந்துவீச்சுச் சராசரிகள்சுவையானவைதிலீபன்ஒருஆட்டத்தில் 5. 2 ஓவர்களில் 5 ஓட்டங்களைக்

தலைவர் கோகுலபாலன். நேராகப்பந்து வீசுவதில் வல்லவர் ஒரு சந்தர்ப்பத்தில்2.1 ஓவர்களில் ஓட்டம் எதுவும் கொடுக்காது 3 இலக்குகளைச் சாய்த்தவர்.

பந்துத்தடுப்பில் மிக வீச்சுக்கொண்ட அணியாக இவர்களை இனங்காட்டுகிறார் தயாளன்- வி. காண்டீபன் எந்தப் பகுதியிலும் நின்று பந்து தடுக்கும் ஆற்றல்கொண்டவர் என்பதுடனும் இவர் விக்கெட் காப்பாளர் பிரசன்னாவின் திறமையையும் எடுத்துக் கூறுகின்றார். பொதுவாக இவர்கள் ரசிகர்களினாலும் கட்டமைப்பானதொரு பந்துத்தடுப்பு அணியாக இனங்காணப்பட்டுள்ளனர்.

எவ்வகையில் நோக்கினும் இவர்களது ஆற்றல்கள் சிறிது அதிகம தான் என்று கூறும் பயிற்றுநர் இவ்வணியின் முக்கிய அங்கத்தவர்களான கார்த்திக், பிரசன்னா, அனோஜன் மூவரும் 95 லும் இதே வயதுப் பிரிவில் தான் விளையாடப் போகிறார்கள் என்று கூறுகின்றார். மேலும் இவ்வருட 15 வயதிற்குட்பட எந்த ஒரு அணியையும் விட அதிக கூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட அணி யாழ் இந்துக் கல்லூரி அணி தான் என்றவாறு தொடரும் இவர் ''விளையாடிய ஆறு ஆட்டங்களில் 2 ஆட்டங்களில் இறுதி வெற்றியைப் பெற்றார்கள் ஏனைய போட்டிகளில்போதிய புள்ளிகள் பெற்றதால் வெற்றிநோக்கின்றி அனுபவ மேம்பாட்டுக்காகவே வீரர்கள் விளையாடினர்'' என்று முடிக்கிறார்.

இவ் வருடம் 3 பிரிவு பாடசாலைக் கிரிக்கெட் அணிகளிலும் பரபரப்பாகப் பேசப்பட்ட அணிகளுள் யாழ் இந்துக்கல்லூரி 15 வயதிற்குட் பட்ட அணியும் ஒன்று ஆனால் உரையாடலின் போது இச் சாதனைகள் இலகுவில் வந்து விட்டதொன்றல்ல என்பது புரிந்தது. இவ் விளம் வீரர்களின் சாதனைக்காக உழைத்த ஒவ்வொருவரும் பாராட்டுக்குரியவர்கள்.


## ★ விளையாட்டு அரங்கு ★


# யாழ். இந்துக் கல்லூரியின் நட்சத்திர ஆட்டக்காரர் கார்த்திக்



**சிவபாலன் கார்த்திக்**
**யாழ். இந்துக் கல்லூரி**

இவ் வருட 15 வயதிற்குட்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் பெறப்பட்ட சதங்கள் இரண்டு மட்டுமே. இதில் இரண்டாவது சதத்தைப் பெற்றவர், சி. கார்த்திக் கல்லூரி அணியின் முதலாம் இலக்கத் துடுப்பாட்ட வீரர். இம் முறை ஸ்ரான்லிக் கல்லூரிக்கெதிரான அரையிறுதிப் போட்டியில் ஆட்டமிழக்காது 136 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார். 29.05,1980 இல் பிறந்த இவர் ஒரு வலது கைத் துடுப்பாட்ட வீரர். வலது கை வேகப் பந்து வீச்சாளரும் கூட. ''ஒரு ஆரம்பத் துடுப்பாட்ட வீரருக்குரிய இயல்புடன் நீண்ட நேரம் நின்று ஆடி மற்றவர்களை இலகுவான மனதுடன் களத்தில் நுழைய வழிவகுப்பவர்'' எனும் பயிற்றுனர் தொடர்ந்து கருத்துக் கூறுகையில் ''களத்தில் எல்லைப்புற பந்துக் காப்பில் சிறந்தவர். அதோடு அத்தூரத்தில் இருந்து சரியான இடத்துக்கு பந்தினைத் திருப்பி அனுப்புவதிலும் சிறந்தவர்'' என்கிறார். தன் வெற்றிக்குக் காரணம் வித்தி சேர், தயாளன் சேர் என்று நன்றியுடன் இனங்காட்டும் இவர் பற்றிய மேலதிகத் தகவல்களைப் பெற பயிற்றுநரிடமும் தாயாருடனும்தான் உரையாட வேண்டியிருந்தது. இவரது தம்பி லக்ஷ்மிகாந்தனும் 15 வயதிற்குட்பட்ட பிரிவின் ஒரு றிசேவ் வீரர்- கார்த்திக் ஜொலிஸ்ரார் அணியின் றிசேவ் வீரர். கார்த்திக்கின் தந்தையின் அபரிமிதமானஆர்வம் கார்த்திக்கின் சிறப்புக்கு இன்னொரு காரணமாக அமைகிறது. தனது சதம் பற்றிக் கூறுகையில் 50 ஐத் தாண்ட தான் பதற்றப்படவில்லை என்றும் ஆனால்





யாட்டத்தில்சிறந்தபந்துவீச்சாளர், சிறந்த சகலதுறை வீரன் என்ற பெயர்களையு தட்டிக் கொண்ட இவர் இவ்வருட கல்லூரி உதைபந்தாட்ட அணியின் தலைவரும், கோல் காப்பு வீரரும் கூட- தனது வெற்றிக்கு தன் பயிற்றுநர்களே காரணம் என்பதைக் கூறும்படி கேட்டுக் கொண்டார்-

'94இல் தயாளன் இவ்வணியைப் பொறுப் பேற்றுக் கொண்டார் என்பதும் உரையாடலின் போது தெரிந்தது.

வெற்றிக் கிண்ணத்தை நோக்கிய பாதையில் இவர்கள் 6 ஆட்டங்களைச் சந்தித்துள்ளார்கள். இதில் சென் பற்றிக்ஸ் கல்லூரிக்கு எதிரான ஒரு போட்டியில் மட்டுமே சகல இலக்குகளையும் இழந்திருக்கிறார்கள். இதனை விட எந்த ஆட்டத்திலும் 200-க்குக் குறைவான

ஜன்- அநேகமான ஆட்டங்களில் இவர்களே ஆட்டத்தை முடித்துக்கொடுத்ததை அவதானிக்கமுடிகிறது- இவர்களின் பந்துவீச்சுச் சராசரிகள்சுவையானவைதிலீபன்ஒருஆட்டத்தில் 5. 2 ஓவர்களில் 5 ஓட்டங்களைக் கொடுத்து 5 இலக்குகளைச் சரித்துள்ளார். அனோஜன் 5 ஓவர்களில் 6 ஓட்டங்களைக் கொடுத்து இன்னொரு ஆட்டத்தில் 5 இலக்குகளைச் சரித்துள்ளார். பந்துவீச்சில் மூன்றாவதாகக் கொள்ளத்தக்கவர் உதவித்



வீரர். கார்த்திக்கின் தந்தையின் அபரிமிதமானஆர்வம் கார்த்திக்கின் சிறப்புக்கு இன்னொரு காரணமாக அமைகிறது. தனது சதம் பற்றிக் கூறுகையில் 50 ஐத் தாண்டத் தான் பதற்றப்படவில்லை என்றும் ஆனால் 90 களில் சிறிது தயக்கம் ஏற்பட்டது என்று கூறுகிறார் ஆனால் 136 வரை ஆட்டமிழக்காது நின்றிருக்கிறார்- இறுதி

ரும், கோல் காப்பு வீரரும் கூட- தனது வெற்றிக்கு தன் பயிற்றுநர்களே காரணம் என்பதைக் கூறும்படி கேட்டுக் கொண்டார்-

★

# நடந்து முடிந்த உலகக் கோப்பை உதைபந்தாட்டம் பற்றி சில தகவல்

★ உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் கலந்து கொண்டு சாதனையாக 21 ஆட்டங்களில் கலந்து கொண்டவர்கள் ஜேர்மனியின் யூசிலரும், போலந்தின் ஜமுதா, ஆர்ஜென்ரீனாவின் மரடோனா ஆகிய மூவருமே இவர்களுடன் பல்கேரிய அணிக்கு எதிரான ஆட்டத்தில் விளையாடிய ஜேர்மனிய அணித் தலைவர் லோதர் மத்தாயசும் 21 ஆட்டங்களில் விளையாடியவர் என்ற சாதனைப் பட்டியலில் சேர்கிறார். இதற்கடுத்த கட்டமாக அரை இறுதி ஆட்டத்தில் நுழைந்திருந்தால் உலக சாதனையாக 22 ஆட்டங்களில் விளையாடியிருப்பார். ஆனால் அரை இறுதியாட்டத்துக்கு ஜேர்மனி போகவேயில்லை.

★ ★ ★

★ இம்முறை நடைபெற்ற உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி கால் இறுதியாட்டத்திலேயே ஜேர்மனி பல்கேரியாவிடம் தோல்வியுற்றது. அதற்கு முன் பல்கேரிய-மெக்சிக்கோ அணிகளுக்கிடையிலான ஆட்டத்தைப் பார்த்த ஜேர்மன் பயிற்சியாளர் பேர்ட்டி வொக்ட்ஸ் ல்கேரியா பற்றி ஜேர்மனிக்கு எச்சரித்திருந்தார். பல்கேரிய ஆட்டம் வேகமாக முன்னேறுவதாகவும், தென் அமெரிக்கபாணியில் இவர்கள் விளையாடுவதாகவும் மிக்க அவதானம் தேவையென்றும் கூறியிருந்தார். அவர் அஞ்சியது போலவேயாயிற்று. ஜேர்மனி தோற்கடிக்கப்பட்டது.

★ ★ ★

★ உலகக் கோப்பை சுற்றுப் போட்டிக்கு சுவீடன் எவ்வாறு தகுதி பெற்றது? சுவீடன் பின்லாந்து அணியை 3-2 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தாலும் பிரான்சை இஸ்ரேல் தோற்கடித்தால் மட்டுமேபுள்ளி அடிப்படையில் சுவீடன் தேற முடியும். ஆனால் இஸ்ரேல் பிரான்சை வெல்லுமென்பது கற்பனைக்குத்தான் சரி என்று சுவீடன் நினைத்தது- இருந்தும் நடந்தது வேறாக இருந்தது. 3-2 என்ற கோல் கணக்கில் இஸ்ரேல் பிரான்சை தோற்கடித்தது. சுவீடன் உலகக் கிண்ணப் போட்டிக்காகச் சென்றது. அதுமட்டுமல்ல 3-வது இடத்தையும் பெற்றுக் கொண்டது.

★ ★ ★

★ '94 உலகக் கிண்ணப் போட்டிகளில் சிறந்த வீரனாகத் தெரிவு செய்யப்பட்டு தங்கப் பந்தைப் பெற்றுக் கொண்டவர் பிரேசிலிய வீரர் றொமாறியோ. புள்ளிகள் கணித்தலில் றொமாறியோ 2400 புள்ளிகளும், றொபேட்டோ பாகியோ 1500 புள்ளிகளும், ஸ்ரொய்கொவிச் 450 புள்ளிகளும் பெற்றனர். முன்பாக 78-ல் ஆர்ஜென்ரீனா மாரியோ கெம்பஸ், 82-ல் இத்தாலிய பாலோ றோசி 86-ல் மரடோனா 90-ல் இத்தாலிய சல்வடோர் சியாலாச்சி ஆகியோர் இவ்விருதினைப் பெற்றுக் கொண்டவர்களாவர்.

★ ★ ★

★ ஜேர்மனி - பெல்ஜியம் கலந்து கொண்ட உலகக் கிண்ணப் போட்டியில் ஜேர்மனி 3-2 என்றவாறு வெற்றி கண்டது. ஆனால் இதில் தான் பெல்ஜியத்துக்கு வழங்க வேண்டிய பெனால்டி ஒன்றை வழங்காமல் விட்ட பிழையை ஒப்புக் கொண்டுள்ளார் சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த இந்த மத்தியஸ்தர் தான் 25 மீற்றர் தூரத்தில் அதுவும் பின்புறமாக நின்றதால் என்னால் கவனிக்க இயலவில்லை என்கிறார். பின்னர் தொலைக்காட்சியில் பார்த்தபோது தெளிவாகத் தெரிந்த பிழை நேரடியாகத் தெரியவில்லை என்றும், என்றாலும் பிழை பிழைதான் என்றும் ஒப்புக் கொண்டார். இவருடைய வருத்தம் என்னவென்றால் இறுதிப் போட்டியில் மத்தியஸ்தம் வகிக்கும் சந்தர்ப்பம் இல்லாமற் போகுமோ என்பதுதான். ★ ★

★ உலகக் கிண்ண உதைபந்தாட்டத்தின் அரை இறுதியாட்டத்தில் பல்கேரியா இத்தாலியிடம் 2 - 1 என்றவாறு தோல்வி கண்டது. இத் தோல்வி குறித்துக் கருத்துத் தெரிவித்த பல்கேரிய வீரர் தமக்குக் கிடைக்க வேண்டிய இரண்டு பெனால்ட்டிகளை பிரான்சிய மத்தியஸ்தர் தமக்குத் தரவில்லை என்றும் இதற்குக் காரணம் பிரான்சை உலகக் கிண்ணப் போட்டிகளில் இருந்து தட்டிவிட்டது, பல்கேரியா என்பதால் பிரான்சு மத்தியஸ்தர் பல்கேரியாவைப் பழி வாங்கி விட்டார் என்றும் இவர்கள் கூறுகிறார்கள்.

இது குறித்து பல்கேரியாவின் முன்னணி வீரரான ஸ்டாயிச்கோவ் தெரிவிக்கையில் ''கடவுள் எங்கள் பக்கம் தான். ஆனால் நடுவர் பிரான்சு நாட்டுக் காரராக அமைந்து விட்டாரே'' என்றார். ★ ★

## துயரான முடிவுகள்

விளையாட்டுக்கள் மகிழ்ச்சிக்குரியனவாக இருந்த போதும் சில வேளைகளில் மிக மனவேதனையை ஏற்படுத்துவதாகவும் அமைந்து விடுவதுண்டு. இந்த வகையில் அதிவேகக் கார் ஓட்டப் பந்தைய வீரர் பிரேசிலைச் சேர்ந்த அயர்ட்ன் சென்னாவின் மரணத்தையும், கொலம்பிய உதைபந்தாட்ட வீரர் எஸ்கோபர் சுட்டுக்கொல்லப்பட்டதையும் கூறலாம்.

மூன்று முறை உலகச் சாம்பியன் பட்டத்தைப் பெற்ற சென்னா ஆறு முறை மொன்ரிகாலோ கிரோண் பிரி போட்டிகளிலும் வெற்றி பெற்றவர். இத்தாலியின் இவ் வகைப் போட்டியொன்றில் ஏழாவது சுற்றிலும் முதலாவதாக 290 கி மீற். வேகத்தில் வந்துகொண்டிருந்த போது மதிலொன்றுடன் மோதி மரணமடைந்தார்.

அண்மையில் நடைபெற்ற உலகக்கோப்பை உதைபந்தாட்டப் போட்டியில் ஐ. அமெரிக்காவுடனான போட்டி ஒன்றில் கொலம்பியாவின் எஸ்கோபர் தற்செயலாக தன்பக்கமே போட்ட கோலால்கொலம்பியா தோல்வி கண்டது. இதனைக் காரணம்காட்டி கொலம்பியாவில் வைத்து எஸ்கோபரை 12 முறைகள் துப்பாக்கியால் சுட்டுக் கொன்று விட்டனர்.

## உதைபந்தாட்ட விதிகள் மாற்றுவது பற்றி பரீட்சிப்பு

உதைபந்தாட்டப் போட்டிகளில் தற்போது புழக்கத்திலிருக்கும் எறிபந்துக்கு (த்ரோ - இன்ஸ்) பதிலாக உதைபந்து (கிக் - இன்ஸ்) ஐரோப்பாவில் நடைபெறவுள்ள அடுத்த உதைபந்தாட்டப் பருவகாலத்தில் பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்படவுள்ளது என சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளன பொதுச் செயலாளர் செப் பிளட்டர் தெரிவித்துள்ளார்.

பெல்ஜியம், ஹங்கேரி ஆகிய நாடுகளைச் சேர்ந்த இரண்டாந்தரப் போட்டிகளின் போதும் ஆங்கிலேய பகுதிநேர தொழில் சார்ந்த உதைபந்தாட்டப் போட்டிகளின் போதும் இந்த பரீட்சார்த்தம் மேற்கொள்ளப்படும் என அவர் கூறினார் இரண்டு வருடங்களில் உதைபந்தாட்ட விதிகளடங்கிய புத்தகத்தில் இந்த புதிய முறை சேர்க்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த விதிமுறை மாற்றப்படும் பட்சத்தில் தற்போதிலும் பார்க்க எதிர்கால உதைபந்தாட்டம் இன்னும் வேகமாக அமையும் என குறிப்பிட்ட பிலட்டர் கடந்த வருடம் அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற உலக இளைஞர் கிண்ணப் போட்டிகளின் போது இந்த முறை கையாளப்பட்டதை நினைவுபடுத்தினார்.

1860 களிலும் 1870 களிலும் நடைமுறையில் இருந்த உதைபந்து (கிக் - இன்ஸ்) 1882 இல் எறிபந்து (த்ரோ இன்ஸ்) ஆகமாற்றப்பட்டது.

இதே போன்று, அடுத்த உலகக் கிண்ணப் போட்டிகளின் போது வழங்கப்படும் மேலதிக நேரம் தொடர்பான விவகாரமும் மாற்றப்படும் வெற்றி - தோல்வியின்றி முடிவடையும் ஒரு போட்டியில் வழங்கப்படும் மேலதிக நேரத்தின் போது எந்த அணி முதலில் கோல் - போடுகின்றதோ அதுவே வெற்றி அணியாக தீர்மானிக்கப்பட்டு போட்டி முடிவிற்குக் கொண்டு வரப்படும் எனவும் 'பீபா' செயலாளர் தெரிவித்தார்.

# உலக துடுப்பாட்ட வீரரை அச்சுறுத்தும் பாக்.கின் கடும்புயல் இரட்டையர்

கடும்புயல் இரட்டையர் என விமர்சகர்களால் வர்ணிக்கப்படும் பாகிஸ்தான் அணியின் ஆரம்ப வேகப்பந்து வீச்சாளர்களான வாசீம் அக்ரத்துக்கும் வக்கார் யூனிசுக்கும் அஞ்சாத துடுப்பாட்டவீரர்கள தற்போதைய கிரிக்கெட் உலகில் இல்லை எனலாம், உலகின் மிகச்சிறந்த ஆரம்ப பந்து வீச்சு ஜோடியாக கணிக்கப்படும் இந்த ஜோடி பல ஆட்டங்களிலே பாக். அணியை தோல்வியில் இருந்து காப்பாற்றி அதிசயிக்க வைக்கும் பல வெற்றிகளை பாக். அணிக்கு பெற்றுக் கொடுத்திருக்கிறது. உதாரணமாக சில ஆட்டங்களை இங்கு குறிப்பிடலாம்.பாகிஸ்தான் அணி நியூசிலாந்து அணியை எதிர்த்து 1993-ம் ஆண்டு நியூசிலாந்தின் கமில்ரன் நகரில் ஆடிய டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து வெற்றி பெற தனது இரண்டாவது இனிங்சில் 127 ஓட்டங்களை பெற வேண்டியிருந்தது. ஆனால் அவ்வணி பெற்றதோ 93 ஓட்டங்கள் தான் இதற்கு காரணம் இந்த ஜோடியின் அபார வேகப்பந்து வீச்சேயாகும். நியூசிலாந்து அணியின் 10 இலக்குகளில் வாசீம் அக்ரம் 45 ஓட்டங்களிற்கு 5 இலக்குகளையும், வக்கார் யூனுஸ் 22 ஓட்டங்களை மட்டும் கொடுத்து 5 இலக்குகளையும் சாய்த்து பாக். அணியை 34 ஓட்ட வித்தியாசத்தால் வெற்றிபெறச்செய்தனர் இப்போட்டியில் நியூசிலாந்து அணியின் வீழ்ந்த 20 இலக்குகளில் 17 இலக்குகளை இந்த ஜோடி சுவீகரித்தது கடந்த உலகக்கிண்ண இறுதிப் போட்டியில் பாக் அணி இங்கிலாந்து அணியை எதிர்த்தாடியது இவ்வாட்டத்தில் காயம் காரணமாக வக்கார் யூனுஸ் ஆடமுடியாவிட்டாலும் வாசீம் அக்ரம் வீழ்த்திய இங்கிலாந்து அணியின் 3 விக்கெட்டுகளே உலகக் கிண்ணத்தை பாக். அணி வெல்ல வழி வகுத்தது. இதனால் அவ்விறுதியாட்டத்தின் நாயகன் விருதும் அவருக்கு கிடைத்தது. ஒருதினப் போட்டிகளில் உலகின் மிகச்சிறந்த பந்து வீச்சாளர் எனக் கணிக்கப்படும் வாசீம் அக்ரம் பந்தினை இருபுறம் ஸ்விங் செய்வதில் வல்லவர் தற்போது பாகிஸ்தான் அணி மேற்கொண்டிருக்கும் இலங்கைச் சுற்றுலாவுக்கு முன்னர் நியூசிலாந்தில் நடைபெற்ற நியூசிலாந்து - பாகிஸ்தான் ஒருதினப் போட்டித்தொடர், டெஸ்ட்தொடர் ஆகியவற்றில் பாக். அணி வெல்ல வழிவகுத்தது இந்த ஜோடியின் அபார வேகப் பந்து வீச்சேயாகும். ஒருதினப் போட்டித் தொடரில் 2 வது ஆட்டத்தில் வாசீம் அக்ரம் 23 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளைச் சாய்த்து நியூசிலாந்து அணியை தோல்வியுறச் செய்தார்.

அத்தொடரின் நான்காவது போட்டியில் நியூசிலாந்து வெற்றி பெறும் எனச்சகலரும் எதிர் பார்த்தனர் ஆனால் வக்கார் யூனுசின் இறுதிக் கட்டப்பந்து வீச்சில் நிலைமை தலைகீழாயிற்று. அவர் வீசிய 20 பந்து வீச்சுகளில் 8 ஓட்டங்களை மட்டும் விட்டுக் கொடுத்து 4 இலக்குகளைச் சாய்த்து அவ்வாட்டத்தைச் சமமாக்கினார். அவ்வாட்டம் TIE-ல் முடிவுற்றது இவர் அப்போட்டியில் 30 ஓட்டங்களுக்கு 6 இலக்குகளைக்கைப் பற்றினார் பாகிஸ்தான் ஒருதினப் போட்டித் தொடரை 3:1 என்றவாறு வென்றது.

கே பிரபாகரன்
சென். பற்றிக்ஸ் கல்லூரி
யாழ்ப்பாணம்.

டெஸ்ட் தொடரிலும் வாசீம் அக்ரத்தின் பந்து வீச்சு மிக அபாரமாக அமைந்திருந்தது. டெஸ்ட் தொடரின் முதலாவது இரண்டாவது போட்டிகளில் வாசீம் அக்ரம் முறையே 9-11 இலக்குகளைக் கைப்பற்றி பாகிஸ்தான் அணியை வெற்றி பெறச் செய்தார்.

மூன்றாவதும் இறுதியானதுமான டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து வென்றாலும் கூட வக்கார் யூனுஸ் 7 இலக்குகளைக் கைப்பற்றி இருந்தார் டெஸ்ட் தொடரையும் பாகிஸ்தான் 2:1 என்ற ரீதியில் வெற்றி கொண்டது.

உலகின் வேகப் பந்துவீச்சாளர்களைக் கணிக்கும், கணனிக் கணித்தல் முறையில் தொடர்ந்து இரு வருடங்கள் வக்கார் யூனுஸ் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார். அவருடைய இலக்கு எடுக்கும் வீதம் ஆட்டத்துக்கு 6 என்றவாறு அமைகிறது. இத்தகு நிலையில் இலக்கு எடுக்கும் தரத்தை தற்போது எந்தப்பந்து வீச்சாளரும் கொண்டிருக்கவில்லை என்று கருதப்படுகின்றது.

டெஸ்ட் போட்டிகளில் வாசீம் அக்ரம் 222 இலக்குகளைச்சாய்த்துள்ளார் சிறந்த பந்து வீச்சாக 7/119 என்று அமைகிறது இனிங்சுக்கு 5 இலக்கு என்ற வகையில் 15 தடவைகள் கைப்பற்றியுள்ளார்.

ஒரு போட்டியில் 10 இலக்கு என்ற வகையில் 3 முறைகள்பெற்றுள்ளார் வக்கார் யூனுஸ் 166 இலக்குகளையும் சிறந்த பந்துவீச்சாக 7/76 யும்' இனிங்சில் 5 இலக்குக்கு மேல் 17 முறையும் போட்டியில் 10 இலக்குக்கு மேல் 3 முறையும் கைப்பற்றியுள்ளார்.

மட்டுப்படுத்தப்பட்ட போட்டிகளில் வாசீம் அக்ரம்' 238 இலக்குகளைச்சாய்த்துள்ளார் சிறந்த பந்து வீச்சாக 5/15 என்பது அமைகிறது வக்கார் யூனுஸைப் பொறுத்தவரை 141 இலக்குகளை பெற்றுள்ளார். சிறந்த பந்து வீச்சாக அமைவது 6/26 என்பதாகும், இத்தரவுகள் 94 ஜூலைவரையானதாகும்.

தற்போது இவர்கள் இருவரும் சிறிலங்காவிற்கு வந்துள்ளார்கள் 3டெஸ்ட் ஆட்டங்கள் 3 ஒரு நாள் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிகளில் ஆடப்போகிறார்கள். இங்கும் இச்சோடி சிறப்பாகவே செய்யும் என எதிர்பார்க்கலாம்.

# இங்கிலாந்து கிரிக்கெட் அணிக்கு தாயகமண்ணில் ஏற்பட்ட தலைகுனிவு

மேற்கிந்தியத்தீவுகளில்இங்கிலாந்துகிரிக்கெட் அணிடெஸ்ட் தொடரில் 3 - 1 என்றவாறு தோல்வியுற்றுத் திரும்பினாலும் கூட அவர்களுக்கு ஒரு பெருமிதம் இருந்தது. பிரிட்ஜ்டவுண் டெஸ்ட்டில் மேற்கிந்திய அணியைத் தோற்கடித்ததே அதுவாகும் இதைத் தொடர்ந்து இங்கிலாந்தில் தென் ஆபிரிக்க அணியுடன் அவர்களுக்கு டெஸ்ட்தொடர் காத்திருந்தது. கடும்போக்கைக் கொண்ட இங்கிலாந்து அணித்தலைவர் மைக்அத்தர்டன் அணியில் சில மாற்றங்களைச் செய்து கொண்டே தென் ஆபிரிக்காவுடன் மோதுவார் என எதிர் பார்க்கப்பட்டது போலவே அணியில் புதியவர்கள் காணப்பட்டார்கள்.

இவ்வகையில் பலமானதொரு அணியாகத் தம் தாயகத்தில் -தென் ஆபிரிக்காவுடனான முதலாவதுடெஸ்ட்டில் இங்கிலாந்துபோட்டியிட்டது. தெ. ஆபிரிக்கா இனஒதுக்கல் கொள்கை காரணமாக சர்வதேசப் போட்டிகளில் பங்குகொள்வது தடை செய்யப்பட்டபின் இங்கிலாந்துக்கு உத்தியோக பூர்வமாக வந்தது இதுவே முதல் தடவை அதிலும் இவ்வாட்டம் கிரிக்கெட்டின் தலைமைப்பீடம் எனக் கருதப்படும் லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்றது இன்னும் சிறப்பானது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தென் ஆபிரிக்க அணி மெதுவாகவே தன் ஓட்ட எண்ணிக்கையை ஆரம்பிக்க வேண்டியிருந்தது. குறிப்பாக அணித்தலைவர் கெப்லர் வெசல்ஸ் சிறுகச் சிறுகச் சேர்த்து முக்கியத்துவம் வாய்ந்த சதம் ஒன்றினைப் பெற்றுக் கொண்டார். வெசல்ஸ் 105 ஓட்டங்களும் காரி கிரிஸ்டன் 72 ஓட்டங்களும் பெற்றுக் கொண்டனர். பின் வரிசையும் சராசரியாக ஓட்டங்களைச் சேர்க்கவே சகல இலக்கு இழப்பிற்கு 357என்ற நிலையில் தெ. ஆபிரிக்கா கௌரவமானதொரு நிலையைப் பெற்றது. டீ.கோ 4 இலக்குகளையும் வைற் 3 இலக்குகளையும் பெற்றுக்கொண்டனர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாட ஆரம்பித்த இங்கிலாந்து தெ. ஆபிரிக்காவின் நான்கு வேகப் பந்து வீச்சாளர்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இங்கிலாந்து 180 ஓட்டங்களுக்குத் தனது சகல இலக்குகளையும் இழந்து நின்றது. கிராம்ஹிக் பெற்ற 38 தவிர குறிப்பிடத்தக்க தனிநபர் ஓட்ட எண்ணிக்கை எதுவும் இல்லை. அலன் டொனால்ட் 5 இலக்கு. டீவிலர்ஸ் 3 இலக்கு மக்மிலன் 1 இலக்கு என்றவாறு பெற்று இங்கிலாந்தைச் சரித்துவிட்டனர்.

தொடர்ந்து இரண்டாவது இனிங்சை ஆரம்பித்த தென். ஆபிரிக்க அணி 278/8 என்ற அளவில் தன் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இதிலும் காரி கிரிஸ்டன் 44, வெசல்ஸ் 42 என்றவாறு எண்ணிக்கை பெற்றனர். மீளவும் டீ.கோ 4 இலக்குகளைச்சாய்த்தார். இந்நிலையில் இங்கிலாந்து வெற்றி பெற 456 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் தன் இரண்டாவது இனிங்சைத் தொடங்கியது மீண்டும் தெ. ஆபிரிக்க வேகப்பந்து வீச்சாளர் நால்வரும் இங்கிலாந்தை பரிதாபகரமாக வீழ்த்தினார்கள் அலன் டொனால்ட் 2, டீ விலார்ஸ், 1 மக்மிலன் 3 கிரெய்க் மத்தியூஸ் 3 என்றப இலக்குகளைச் சரிக்கவே இங்கிலாந்து சகல இலக்குகளையும் 99 ஓட்டங்களுக்கு இழந்து 356 பாரிய ஓட்ட எண்ணிக்கையால் தென். ஆபிரிக்காவிடம் தோல்வி கண்டது. அண்மைக் காலங்களில் பல மிக்கதொரு அணியை உருவாக்கக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் இங்கிலாந்து இந்தப் பாரிய அடியின்பின் எவ்வாறு மீண்டும் தன்னைக் கட்டியெழுப்பப் போகிறது என்று தெரியவில்லை.

1968—69-ல் இங்கிலாந்து கிரிக்கெட் அணியில் தென் இந்த நிபந்தனைக்கு மறுத்தது மட்டுமன்றி அந்தச் சுற்றுப் போட்டியையும் ரத்துச் செய்தது இச்சம்பவத்தில் சம்பந்தப்பட்ட அவர் இங்கிலாந்திற்காக 41 டெஸ்ட் ஆட்டங்களில் ஆடியவர் தற்போது 62 வயதாகும் இவர் பேசில் டீ ஒலிவேரா என்ற இந்த சகலதுறை விளையாட்டுவீரர் முதலாவது டெஸ்ட் போட்டியைப் பார்ப்பதற்காக லோர்ட்ஸ் மைதானத்துக்குவந்திருந்தார்' இங்கிலாந்தின் புகழ்வாய்ந்த லோர்ட்ஸ் மைதானத்தில் தென் ஆபிரிக்கா 29 வருடங்களின் பின்னர் வந்து சிறப்பாக ஆடிக்கொண்டிருப்பது எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது'' என்று கூறியுள்ளார்

இதேவேளை தெ. ஆபிரிக்க அணி முகாமையாளரும் 60 களின் மிகவும் புகழ் வாய்ந்த கிரிக்கெட்வீரராகவும் இருந்த மைக் புரொக்ரர் ''இந்த வெற்றியை எனது நாட்டு ஜனாதிபதி நெல்சன்மண்டேலாவிற்கு அர்ப்பணிக்கிறேன் புதிய தெ. ஆபிரிக்காவின் போக்கிற்கு இது பொருத்தமாக இருக்கும்'' என்கிறார்.

இன்னொரு புறம் இந்த டெஸ்ட் ஆட்டத்தில் இங்கிலாந்தின் அணித் தலைவர் மைக் அதர்டன் பந்தை முறை கேடாகப் பாவித்தார் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளார் இங்கிலாந்தின் பத்திரிகைகளால். அந்தச் சம்பவம் ஒப்பீட்டளவில் பெரிதும் குற்றம் சாட்டப்படத்தக்கதொன்றல்ல என்ற வகையில் 2000 பவுண் அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறார்- நாளை ஆரம்பமாகும் 2ஆவது டெஸ்ட் போட்டியிலும் இவரே அணித்தலைவராக இருப்பார்என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பாகிஸ்தானின் அணித் தலைவர் சலீம் மாலிக் சிறிலங்காவில் இருந்து கருத்துக் கூறுகையில் எப்பொழுதும் வாசீம் அக்ரம், வக்கார் யூனுஸ் இருவரையும் கொச்சைப் படுத்துவதையே கொள்கையாகக் கொண்ட இங்கிலாந்தின் கிரிக்கெட் தலைமையகம் இந்த வெட்கக்கேட்டில் இருந்துதப்பிக்கொள்ளஎன்ன செய்யப்போகிறது என்று வினவுவதோடு, அவர்கள் இதைப் பெரிதுபடுத்தாமலே விட்டு விடுவார்கள் என்று குற்றம்சாட்டுகிறார்.

முக்கியத்துவம் வாய்ந்ததொரு டெஸ்ட் ஆட்டமாக

பல்கலைக்கழகம் - இந்துமகளிர் கல்லூரி

## மகளிர் ஹொக்கிபோட்டி ட்ரோவில் முடிந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழகமகளிர் அணியினருக்கும் யாழ்-இந்து மகளிர் கல்லூரி அணியினருக்கும் இடையில் கடந்த வெள்ளியன்று நடைபெற்ற ஹொக்கி ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

பல்கலைக்கழக ஹொக்கி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்- இந்துமகளிர் கல்லூரி அணி சிறப்பாக விளையாடியது குறிப்பிடத்தக்கது. இவ்ஆட்டத்தில் திரு. பி. இரட்ணசபாபதி, பி. சயந்தகுமார் ஆகியோர் நடுவர்களாக கடமையாற்றினர். (50)

## பயிற்சி வகுப்புகள்

புதிய மத்தியஸ்தர்களை உருவாக்கும் திட்டத்தின் கீழ் வடமராட்சி வலய உதைபந்தாட்ட சபையின் அனுமதியுடன் பருத்தித்துறை கால்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் இப்பயிற்சி வகுப்புகளை ஆரம்பிக்கின்றன.

இவ் வைபவம் எதிர்வரும் சனிக்கிழமை காலை 10 மணிக்கு தேவரையாளி இந்துக் கல்லூரியில் மத்தியஸ்தர் சங்கத் தலைவர் திரு. மா. கிருஷ்ணகாந்தன் தலைமையில் நடைபெறும்.

## கரபந்தாட்ட இறுதியாட்டம் ஆவரங்கால் வி. க. வெற்றி

அரியாலை சிற்றம்பலம் விளையாட்டுக் கழகம் அதன் 2-வது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடாத்திய கரபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டங்களும் பரிசளிப்பு விழாவும் கடந்த 28-ந்திகதிமாலை மின்னொளியில் சிற்றம்பலம் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது-

அரை இறுதி ஆட்டத்தில் ஆவரங்கால் ஐக்கிய விளையாட்டுக் கழக அணி அதனை எதிர்த்து மோதிய அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை மூன்று நேர் செற்றுகளில் 15:7, 15:1, 15:6 [illegible] னார்கள்-

அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற காட்சி ஆட்டத்தில் யாழ் மத்திய கல்லூரி அணி அதனை எதிர்த்தாடிய கனகரெத்தினம் மகா வித்தியாலய அணியை இரு நேர் செற்றுகளில் 15:7, 15:6 என்ற புள்ளிக் கணக்கில் வென்றது. இவ் ஆட்டத்திற்கு நடுவர்களாக கப்டன் குணசிங்கமும், சுதேசனும் கடமையாற்றினார்கள்.

இடம்பெற்ற இறுதியாட்டத்தில் ஆவரங்கால் ஐக்கிய விளையாட்டுக் கழக அணி அதனை எதிர்த்

# பொதுஜன அனுபவம்

# பொதுஜன அனுபவம் ராஜீவ் காந்திக்கு இல்லை

## முன்னாள் இந்திய ஜனாதிபதி வெங்கட்ராமன்

(சென்னை)

ராஜீவ்காந்தி ஆரம்பத்தில் உறுதியான அணுகுமுறைகளை மேற்கொண்டார் ஆனால் அவருக்கு போதிய பாராளுமன்ற அனுபவம் கிடையாது, இதனால் பாராளுமன்ற கூட்டத்தில் கலந்து கொள்வதில் அவர் அவ்வளவாக ஆர்வமும் காட்டவில்லை. இது தொடர்பாக ஒரு முறை நான் அவரிடம் பேசும்போது நீங்கள் அடிக்கடி சபைக்கு வந்து உறுப்பினர்களை சந்திக்க வேண்டும் என்றேன். ஆனால் அதற்கு பலன் இல்லை. இவ்வாறு முன்னாள் இந்திய ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

இவர் எழுதிய 'எனது ஜனாதிபதி பதவி காலத்தில்' என்ற நூலில் அவர் ராஜீவ் காந்தியை குறைவாக மதிப்பிட்டு எழுதியுள்ளார். இதனைத் தொடர்ந்து இந்நூல் தொடர்பாக இந்தியாவில் பெரும் சர்ச்சை ஏற்பட்டுள்ளது. வெங்கட்ராமன் கொடும்பாவிகள் ராஜீவ் ஆதரவாளர்களால் எரிக்கப்பட்டு வருகின்றன. இவ் வேளையில் இந்நூல் மூலம் தற்போது சர்ச்சைக்குரியவராகமாறிவிட்ட முன்னாள் ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன் தனது தொலைக்காட்சி பேட்டியில் மேலும் தெரிவிக்கையில், போதிய பாராளுமன்ற அனுபவம் இல்லாததால் தான் ராஜீவ் பல இடைஞ்சல்களை எதிர்நோக்கினார். அவருக்கு நல்ல அனுபவம் இருந்திருந்தால் போபர்ஸ் பிரச்சினையை அவர் இன்னும் திறமையாக சமாளித்திருப்பார்.

நான் துணை ஜனாதிபதியாக 1987இல் இருந்தபோது ராஜீவ் காந்தியை நீக்கிவிட்டு என்னை பிரதமராக்க முயற்சி நடந்தது. மூத்த இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் சுமார் 240 பேர் அப்போதைய ஜனாதிபதி ஜெயில் சிங்கிடம் ராஜீவை பிரதமர் பதவியிலிருந்து நீக்குமாறு கோரினர். இந்த எம் பி. கள் அவ்வருட ஜூன் 8ஆம் திகதி துணை ஜனாதிபதியாக இருந்த என்னை வந்து சந்தித்து சில விபரங்களை தெரிவித்தனர்.

ஜனாதிபதி ஜெயில் சிங் ராஜீவை நீக்கிவிட்டு உடனடியாக வேறு ஒருவரை பிரதமராக்கப் போகிறார். ராஜீவுக்கு பதிலாக நீங்களே பிரதமராக வேண்டும் என அந்த எம்.பிகள் என்னைக் கேட்டுக் கொண்டனர். ஆனால் அதை ஏற்க நான்மறுத்துவிட்டேன்.

எனது பதவிக்காலத்தில் நான் சந்தித்த மற்றைய இரு பிரதமர்களான வி.பி. சிங்கும், சந்திரசேகரும் நல்ல திறமைசாலிகள் அவர்களுக்கு மட்டும் பாராளுமன்றத்தில் போதிய பெரும்பான்மை இருந்திருந்தால் அவர்கள் தமது திறமையை முழு அளவில் நிரூபித்திருப்பர் என்னைப்பொறுத்தவரையில் சந்திரசேகர் சிறந்த திறமைசாலி அவரின் அணுகுமுறை எனக்கு பிடித்தது பாராளுமன்றத்தில் போதிய பலம் இல்லாமல் அவரால் என்ன செய்து விடமுடியும்? அவர் நல்ல பெரும்பான்மையுடன் ஆட்சியில் இருந்திருப்பின் ஒரு நல்ல ஆட்சியை நாட்டுக்களித்திருப்பார் அவரின் திறமை நிரூபிக்கப்பட்டிருக்கும்.

தற்போதைய பிரதமர் நரசிம்மராவ் எந்த விஷயத்தையும் கூர்ந்து கவனித்து மிக விழிப்புடனும் முன்னெச்சரிக்கையுடனும் செயற்படுபவர். இதனால் அவர் அவசரப்பட்டு எதையும் செய்வதோ சொல்வதோ கிடையாது. கடினமான வார்த்தைகளையும் பயன்படுத்துவதில்லை தன் எண்ணங்களையும் கருத்துக்களையும் அவர் மற்றவர்களுக்கு தெரிவிக்காததால் அவர் எந்த முடிவும் எடுக்காதவர் போல்தோன்றலாம்.

ஆனால் உண்மை அது வல்ல. தேர்தல் கமிஷனர் டி. என். சேஷன் சீர்திருத்தங்களை விரும்புகிறார் சிறந்த அதிகாரியான அவர் தனது பணியை செவ்வனே செய்ய வேண்டும். ஆனால் அது பற்றி வெளியில்பேசக்கூடாது

ஜனாதிபதி மாளிகை என்பது அனைத்து வசதிகளும் நிறைந்த கௌரவமான அழகான சிறை. அங்குள்ளபாதுகாப்பு கெடுபிடிகளும் கட்டுப்பாடும் ஒரு அழகான சிறையில் இருப்பதை உணர்த்தும் அங்கு தனிமையே கிடையாது மாலையில் தனியாக உலாவச் செல்ல முடியாது. பின்னாலும் முன்னாலும் 12 பேர் கூடவே வருவர் ஜனாதிபதி மாளிகையின் பாதுகாப்பு, கட்டுப்பாடு ஆரம்பத்தில் எனக்கு வெறுப்பை தந்தது.

நான் பதவியில் இருந்த காலத்தில் நடந்த சம்பவங்களை 12 பெரிய டயறிகளில் குறித்து வைத்து அதைவைத்தே எனது 'ஜனாதிபதி பதவிக் காலத்தில்' என்ற நூலை எழுதினேன் இதற்கு அரச ஒப்புதலை பெறவில்லை என்றார்

எதிர்த்து மோதிய அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை மூன்று நேர் செற்றுகளில் 15:7, 15:1, 15:6 என்ற புள்ளிகள் கணக்கில் வென்று இறுதியாட்டத்தில் ஆடத் தகுதி பெற்றது- இவ் ஆட்டத்திற்கு நடுவர்களாக பலாலி ஆசிரியர் கலாசாலை உடற்கல்வி ஆசிரியர் திரு- கணபதிப்பிள்ளையும், திரு- ஜோண்சனும் கடமையாற்றி

இடம்பெற்ற இறுதியாட்டத்தில் ஆவரங்கால் ஐக்கிய விளையாட்டுக் கழக அணி அதனை எதிர்த்தாடிய அச்சுவேலி விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணியை மூன்று நேர் செற்றுகளில் 15:8, 15:12, 15:12 என்ற புள்ளிகள் கணக்கில் வென்று சம்பியன் கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது.

# பாடசாலை கொட்டகைகள் பயன்படுத்தமுடியாத நிலை

சங்கானைக் கல்விக் கோட்டப் பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட கொட்டகைகள் இவ்வாண்டு இறுதிப் பகுதியில் பயன்படுத்த முடியாத நிலை உருவாகலாமென நம்பப்படுகிறது.

கிடுகுகளால் வேயப்பட்ட இக் கொட்டகைகளே பயன்படுத்த முடியாதிருக்கின்றன வாம் கடந்த வருடம் வேயப்பட்ட இக் கொட்டகைகளின் கிடுகுகள் பழுதடைந்து வெட்டவெளியாகக் காட்சியளிக்கின்றன.

இக்கொட்டகைகள்புதிதாய் வேயப்படாவிட்டால் மழையின் போது மாணவர்கள் இக் கொட்டகைகளில் இருந்து படிக்கமுடியாத நிலை உருவாகும் இதனால் பாடசாலைகளில் இடநெருக்கடி ஏற்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இக்கொட்டகைகளை புதிதாகவேய சங்கானைக் கல்விக் கோட்டம் நடவடிக்கை எடுக்குமா என பெற்றோர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

# ஆஸ்பத்திரி குப்பைக்குள் காணப்பட்ட மனிதக் கால்

[யாழ்ப்பாணம்]

யாழ். போதனா வைத்தியசாலையில் குப்பைகளை அகற்றச் சென்ற யாழ் மாநகர சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் சுத்திகரிப்பு வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவேளை குப்பையுடன் குப்பையாக பண்டேஜ் சுற்றி மூடப்பட்ட மனிதக்காலொன்றைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர்.

யாழ் போதனா வைத்தியசாலையில் சலரோகநோயாளி ஒருவருடைய துண்டிக்கப்பட்ட காலொன்றே இது என பின்னர் விசாரித்த போது தெரியவந்தது.

இது போன்று குப்பையுடன் குப்பையாக பிரேத பரிசோதனைக் கழிவுக் குடல்களும் இரத்தம் போன்றவையும் கழிவுக் கிடங்குகளின் ஊடாக வெளியே அடிக்கடி வருவதாகவும் இதனால் அப்பகுதிகளுக்குச் செல்லும் சுத்திகரிப்புத் தொழிலாளர்களை சுத்திகரிப்புச் செய்யுமாறு பணித்தால் அவர்கள் கால் தெறிக்கஓடுவதாகசுத்திகரிப்பு வட்டார அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (பா)

தெரியவில்லை.

1968—69-ல் இங்கிலாந்து கிரிக்கெட் அணியில் தென் ஆபிரிக்காவில் பிறந்து இங்கிலாந்தில்வாழ்ந்த ஒருவர் அங்கம் வகித்தார். இவரை அணியில்இருந்துநீக்கிவிட்டு தென் ஆபிரிக்கா வருமாறு அந்நாடு இங்கிலாந்தைக் கேட்டுக் கொண்டது. இங்கிலாந்து

விட்டு விடுவார்கள் என்று குற்றம்சாட்டுகிறார்.

முக்கியத்துவம் வாய்ந்ததொரு டெஸ்ட் ஆட்டமாக அமைந்த இந்த டெஸ்ட் போட்டி மைதானத்துக்கு அப்பாலும் பலவித உணர்வலைகளை எழுப்பி என்றும் மறக்க முடியாததொரு ஆட்டமாக அமைந்து விட்டதென்று கூறலாம்.

# சந்திரிகா கொலைச் சதி ஐவர் மீது விசாரணை

(கொழும்பு)

மேல் மாகாண முதலமைச்சரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி பிரதித் தலைவியுமான சந்திரிகா குமாரணதுங்காவை கொலை செய்ய சதித்திட்டம் தீட்டியது தொடர்பாக ஐவர் இரகசியப் பொலிசாரினால் விசாரிக்கப்பட்டுள்ளனர்.

இச்சதி தொடர்பாக கொழும்பில் ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த வர்த்தகர் ஒருவரும் முன்னர் விசாரிக்கப்பட்டிருந்தார்.

சந்திரிகாவை கொலைசெய்வதற்காக கூலிக்கு ஒருவர் அமர்த்தப்பட்டிருந்தார் எனவும் அவர் கொழும்பிலுள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் தங்க வைக்கப்பட்டிருக்கிறார் எனவும் முன்னர் செய்தி வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

# விண்ணப்ப முடிவு திகதியை நீடிக்கக் கோரிக்கை

அரச கூட்டுத்தாபன, மாகாண சேவை சுருக்கெழுத்தாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பித்தல் கடந்த வாரம் பத்திரிகையில் வந்துள்ள செய்திகளின் படி விண்ணப்பங்களை அனுப்பும் முடிவுத்திகதி நேற்றுடன் முடிவடைந்துள்ளது. அத்துடன் குறிப்பிட்ட பதவிக்கு விண்ணப்பித்தல் தொடர்பான அரச வர்த்தமானியும் முடிவுத் திகதியின் பின்னே தான் கிடைக்கப்பெற்றுள்ளது

ஆகவே, மேற்படி பதவிக்கு யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்க முடியவில்லை, என முறையிடப்பட்டுள்ளது.

மேற்படி பதவிக்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் விண்ணப்பிக்க தகுதியான வர்களின் நன்மை கருதி விண்ணப்ப முடிவுத் திகதியினை நீடிக்க நடவடிக்கை எடுக்குமாறு யாழ். அரசாங்க அதிபரை வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம் கடிதமூலம் கேட்டுள்ளது.

# கத்திக்குத்து

மதுபோதையில் இருவருக்கிடையில் எழுந்த வாக்குவாதம் கத்திக்குத்தில் முடிவடைந்த சம்பவமொன்று கரணவாய் அண்ணா சிலையடியில் இடம்பெற்றுள்ளது.

மேற்படி இடத்தைச் சேர்ந்த பஞ்சலிங்கம் என்ற இருபத்தொன்பது வயது நபரே கிறிஸ் கத்தியினால் நெஞ்சில் குத்துக்கு இலக்காகியவராவார். படுகாயமடைந்த இவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின், யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

## சிந்தனைக்கு..

அன்போ பகையோ அரசியல்வாதிகளுக்கு கிடையாது. அவர்கள் உசிதப்படி நடப்பார்களேயன்றி உணர்வின்படியல்ல.

- செஸ்ட்டாஃபீல்ட் பிரபு.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 03-08-1994

தொலைபேசி

ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024

தபால் பெட்டி எண்- 05

## நட்பு - பகை இல்லை; கொள்கையும் இல்லை

அரசியல்வாதிகளுக்கென எவ்வாறு ஒரு இலட்சியம் இல்லையோ அதேபோன்று அவர்களுக்கு நட்பும் கிடையாது, பகையும் இடையாது. தமது அரசியல் லாபம் கிட்டக் கூடிய எந்தக்காரியத்தையும் அவர்கள் செய்யத் தயாராகவே உள்ளனர். இதுவே அவர்களின் கொள்கையாகும். இந்த வகையில் அவர்களுக்கு இன்றைய நண்பன் நாளை எதிரியாகவும், நாளை மறுதினம் நண்பனாகவும் இருப்பார்கள்.

இதற்கு அரசியலில் ஒரு உதாரணம் அல்ல, பல உதாரணங்கள் பரவியே உள்ளன. இதேவேளை ஒரு உதாரணத்தின் மூலம், இதன் பல பரிமாணங்களையும் தெளிவுபடுத்தி விட முடியும். அந்தளவிற்கு அரசியல்வாதிகளின் தடுமாற்றமும், தளம்பலும், அபிலாசைகளும் காலத்திற்கு காலம் மாறிச் செல்லக் கூடியவை.

சிறிலங்காவின் முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா கொல்லப்பட்ட போது அவரது இறுதிக் கிரியை நிகழ்ச்சியில் வைத்தே அவர்மனைவிஹேமா பிரேமதாசா தனது அரசியல் அபிலாசைகளை வெளியிட்டார். ஆனால் ஐ.தே.கவில்அன்று சக்தி பெற்றவர்களாகஇருந்தவர்கள் அதனைக் கண்டு கொள்ளவில்லை. ஹேமா பிரேமதாசா எப்பொழுது ஜனாதிபதி மாளிகையில் இருந்து வெளியேறுவார் என்றே நாள்களை எண்ணினர்.

இதேசமயம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட டி.பி. விஜேதுங்கா பிரேமதாசாவின் கொள்கைகளை மறைமுகமாகவும், நேரடியாகவும் சாடத் தொடங்கினார். பிரேமதாசாவின் கீழ் பிரதம மந்திரி உட்பட முக்கிய அமைச்சுப் பொறுப்புக்களை வகித்த போது கண்ணிற்படாத குறைகள் யாவும் டி.பி.யின் கண்களில் பின்னரே பட்டன.

ஆனால், பிரேமதாசா குடும்பத்தினர் ஒருவருடம் துக்கம் அனுஷ்டித்த, பின்னர் அரசியல் பற்றியும், பிரேமதாசாவின் கொலை பற்றியும் பேசத் தொடங்கிய போது, டி.பி. விஜேதுங்கா ஹேமா பிரேமதாசாவையோ அன்றி அவரது குடும்பத்தையோ கண்டு கொள்ளாமல் இருக்க முடியவில்லை.

அத்தோடு, தென் மாகாணசபைத் தோல்வி பிரேமதாசாவின் கொள்கையை நிராகரிக்க முடியாது என்ற நிலையை உருவாக்கியது. இந்நிலையில், டி.பி. விஜேதுங்கா ஹேமாவிற்கு நட்புக்கரம் நீட்ட வேண்டி வந்தது.

# பத்து சர்வதேச அமைப்புகள் தேர்தலை கண்காணிக்க அழைப்பு

(கொழும்பு)

பத்து சர்வதேச அமைப்புக்கள் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபட வருமாறு தேர்தல் ஆணையாளர் கேட்டுள்ளார். அவற்றில், கொமன் வெல்த் அமைப்பு, சர்வதேச ஜூரிகள்அமைப்பு, லோஏசியா, அடிப்படை உரிமைகளுக்கான ஐ.நா அமைப்பு, சார்க் என்பன அவற்றில் சிலவாகும், முப்பது தொடக்கம் நாற்பது பேர்வரை இக் குழுவில் அங்கம் வகிப்பரெனவும் தெரிய வருகிறது.

இவர்களை விட, சர்வதேச அமைப்பிலுள்ள சட்டவல்லுநர்களும், முன்னாள் சுப்ரீம் நீதிமன்ற நீதியரசர்களும், அட்டர்ணி ஜெனரல்களும், பல்கலைக்கழக துணைவேந்தர்களும், பேராசிரியர்களும், பத்திரிகையாளர்கள், முன்னாள் இராஜதந்திரிகள், தேர்தல் ஆணையாளர்களும் சர்வதேச பார்வையாளர் குழுவில் அங்கம் வகிக்க அழைக்கப்பட்டுள்ளனர்-

ஆகஸ்ட் பத்தாம் தேதியளவில் இவர்கள் வந்து சேர்ந்துவிடுவரெனவும் அறிய முடிகிறது.

### எந்தக்கட்சிக்கும் பெரும்பான்மை இல்லை

# கூட்டரசாங்கம் அமைக்க சிறிமாவோ அழைக்கப்படலாம்

(கொழும்பு)

தேர்தலுக்கு இன்னும் நாட்கள் எண்ணப்படுகையில், வெற்றியாளர் யாரென்பதில் தீர்மானமிருப்பதாக தெரியவில்லைஎன சண்டே ஐலண்ட் தெரிவித்துள்ளது-

தொங்கு பாராளுமன்றமொன்றே அமைக்கப்படலாம் என அவதானிகள் தெரிவிப்பதாக அப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது- ஆனால் பொதுஜன ஐக்கிய முன்னணியோ ஆகக்குறைந்தது 125 இடங்களையாவது கைப்பற்றும் என தெரிவித்துள்ளது-

ஐக்கிய தேசியக்கட்சி, பெருமளவு இடங்களினூடாக வெற்றிபெறும் நிலையிலிருப்பதாக கூறிவருகிறது-

பொதுஜன ஐக்கிய முன்னணி, ஆட்சியை அமைக்கும் போது யார் தலைமைப் பொறுப்பை ஏற்பது என்றசிக்கல் இன்னும் தீர்ந்தபாடில்லை இந்நிலையில் சிறிமாவோ பண்டாரநாயக்காவை ஜனாதிபதி விஜேதுங்கா கூட்டரசாங்கம் ஒன்றை அமைக்க அழைக்கலாம் என சந்திரிகாவிற்கு எதிரான குழு ஒன்று தெரிவித்ததாகவும் ஐலண்ட் மேலும் தெரிவித்துள்ளது-

### பழமரக்கன்றுகள் விநியோகம்

மன்னார் மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் பெரியமடு, பண்டிவிரிச்சான் ஆகிய கிராமங்களைச் சேர்ந்தவர்களுக்கு ஐப்பசி மாதம் தொடக்கம் பழமரக்கன்றுகள் விநியோகம் செய்யப்பட உள்ளன.

பழமரச் செய்கைகளை ஊக்குவிக்கும் முகமாகவும், உற்பத்தியை அதிகரிக்கவும் சூழல் பாதுகாப்பை ஈடுசெய்யவும் தரிசாக இருக்கும் காணிகளில் பயிர் உற்பத்திகளை மேற்கொண்டு அம்மண்வளத்தை பாதுகாத்தல் போன்ற தேவைகளை அடிப்படையாகக் கொண்டு இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

## சுதந்திரக்கட்சி அதன் பழையயுகத்திற்குசெல்லாது

### கிங்ஸ்லி விக்கிரமரட்ன உறுதி

(கொழும்பு)

மீண்டும் 1970 ஆம் ஆண்டு பொருளாதார முறைக்கு நாம் செல்லப்போவதில்லை அந்த யுகம்இனிமேல் வராது. நாம் புதிய வளர்ச்சியை நோக்கி செல்லும் போது பின்னோக்கி செல்ல முடியாது. நாட்டுக்கு பொருத்தமான பொருளாதார முறையை நாம் ஏற்படுத்தவேண்டும். இந்தியா, சீனா போன்ற நடுகள் அவ்வாறான ஒரு நிலையைத்தான் பின்பற்றுகின்றன. இவ்வாறு சுதந்திரக் கட்சி பொருளாளரும் கொழும்பு மாவட்ட வேட்பாளருமான கிங்ஸ்லி டி விக்கிரமரட்ன தெரிவித்துள்ளார்.

சுதந்திர வங்கி ஊழியர் சங்கம் ஏற்பாடு செய்த கூட்டத்தில் பேசிய அவர், நாட்டின் வளர்ச்சிக்கு வெளிநாட்டு முதலீடு தேவை. ஆனால் அதற்காக அந்நிறுவனங்கள் நாட்டின் வளங்களை சூறையாட இடமளிக்க முடியாது. நாம் ஆட்சிக்கு வந்தால் எமது கடந்த ஆட்சியில் ஏற்பட்ட நிலை மீண்டும் வருமா என பலர் கேட்கின்றனர். அந்த சந்தித்து கலந்துரையாடினர். நாம் அவர்களுக்கு எமது பொருளாதாரத் திட்டம் பற்றி விளக்கினோம். இன்றைய பொருளாதார திட்டத்தினால் நன்மையடைவது ஒரு சிறு குழுவினரே என நாம் விளக்கினோம்

உலகவங்கி.பிராந்தியபணிப்பாளரின் அறிக்கையின்படி ஜே. ஆரின் ஆட்சியில் 20 விகிதமாக இருந்த வீண் விரயம் டி.பி. விஜேதுங்காவின் ஆட்சியில் 45 சதவீதமாக அதிகரித்துள்ளது. இறக்குமதி தீர்வை காரணமாக பொருள் விலை அதிகரித்துள்ளது. இத்தீர்வை மூலம் 8 பில்லியன் ரூபா மட்டுமே கிடைக்கிறது. இதை நீக்கினால் பொருட்களின் விலையை 40 வீதத்தால் குறைக்க முடியும் என்றார்.

## தேர்தல் பிரசாரத்திற்கு வசதி செய்யவில்லை

### தேர்தல் ஆணையாளர்மீது குற்றச்சாட்டு

தீவுப்பகுதிகளில் தங்கள் ... கூறியுள்ளதாக கொழும்பு பத்...

## 17 மாவட்டங்களில் கண்காணிப்பு குழுக்கள்

(கொழும்பு)

தேர்தலைக் கண்காணிப்பதற்கான சுதந்திர தேர்தல் அமைப்பு, 10 மாவட்டங்களில், மாவட்டக்கண்காணிப்பு குழுக்களை அமைத்துள்ளதாகவும், இன்னும் ஏழு மாவட்டங்களிலும் இவ்வாறான கண்காணிப்புக் குழுக்களை அமைக்க நடவடிக்கை எடுத்து வருவதாகவும் பி.பி.சி தெரிவித்துள்ளது.

வடக்கிலுள்ள தீவுப்பகுதிகளில், தேர்தல் கண்காணிப்புகளில் ஈடுபட வெளிநாட்டுப் பார்வையாளர்களை இவ் அமைப்பு நிறுத்தவுள்ளது; கிழக்கு மாகாணத்திலும் கண்காணிப்பில் இவ்வமைப்பு ஈடுபடும்.

சுபீட்சமானதும், சுதந்திரமானதுமான தேர்தல் அமைப்பு, மனித உரிமை இயக்கம், ஜனநாயக உரிமைப் பாதுகாப்பு இயக்கம், சுதந்திர செய்தி ஊடக இயக்கம் என்பன போன்ற அமைப்புக்களும் இக் கண்காணிப்பில் ஒத்துழைக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முஸ்லிம் காங்கிரசுக்கு 10 ஆசனங்கள் கிடைக்கும்

### - அஷ்ரப் தெரிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பத்து ஆசனங்களை இந்த தேர்தலில் கைப்பற்றும் என அதன் தலைவர் அஷ்ரப் தெரிவித்துள்ளார்-திகாமடுல்ல தொகுதியிலிருந்து 3 இடங்களும் மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம், வன்னியிலிருந்து தலா ஒவ்வொரு இடமும் ஏனைய மாவட்டங்களிலிருந்து இரண்டு இடமும், தேசியப் பட்டியலின் மூலம் ஒரு இடமும் கிடைக்குமென அவர் தெரிவித்துள்ளார்-

ஐலண்ட்டுக்கு அளித்துள்ள பேட்டி யொன்றிலேயே அவர்இவ்வாறு தெரிவித்தார்-பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்தால் மந்திரிப் பதவியை ஏற்பீர்களா எனக் கேட்டபோது, ஒரு மந்திரியாக வருவதைவிட சட்டத்தரணியாக இருப்பதையே விரும்புகிறேன் என அவர் கூறினார்-

## பிடியாணை பிறப்பித்தும் கைதாகாத உறுப்பினர்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த அசந்த புஞ்சிநிலமே மீது இரத்தினபுரி மாவட்ட நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ள போதும் இதுவரை அவரை பொலிசார் கைது செய்யவில்லை என்று தெரிய வருகின்றது.

இவரின் ஆதரவாளர்கள் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆதரவாளர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட போது அவ்வாதரவாளர் படுகாயம் அடைந்துள்ளார் என்றும், இவரின் வீடு பலத்த சேதம் அடைந்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

இரத்தினபுரி மாவட்டத்தில் நிவித்திகல தேர்தல் தொகுதியில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆதரவாளரான சோமரட்ன மீதே துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றது.

## கிழக்கில் வேட்பாளருக்கு பாதுகாப்பில்லை

### ஈ.பி.ஆர்.எல்.எவ். கவலை

(கொழும்பு)

கிழக்கில், உள்பகுதிகள் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ளதால், அங்கு தேர்தல் பிரசாரம் நடைபெறவில்லை, அங்கு எதிரணி வேட்பாளர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படவில்லை என ஈ.பி.ஆர்.எல்.எவ். செயலாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஐலண்டக்கு அளித்துள்ள பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

## அதிகாரிகள் அசட்டை;

தாசாவின் கொள்கையை நிராகரிக்க முடியாது என்ற நிலையை உருவாக்கியது. இந்நிலையில், டி.பி. விஜேதுங்கா ஹேமாவிற்கு நட்புக்கரம் நீட்டவேண்டி வந்தது. வீடுதேடிச் சென்று சந்திக்கவும் வேண்டிய அவசியமும் எழுந்தது.

அரசியற் குறிக்கோள் கொண்டிருந்ததினால் ஹேமா பிரேமதாசாவும், டி.பியுடன் கைக்குலுக்கிக் கொண்டார். பழையவை அவருக்கு மறந்து போனது. இருவரும் அரசியற் பேரங்களுக்கும் தயாரான நிலையில் இருந்தனர். ஹேமா பிரேமதாசா தேர்தலில் போட்டியிடவும் தயாரானார்.

இந்நிலையில் தான் ஹேமா பிரேமதாசா கொழும்பு கச்சேரியில் வைத்து என்றுமில்லாதவாறு அவமானப் படுத்தப்பட்டார். தேர்தலில் போட்டியிடும் பட்டியலில் இடம்பெறுவதற்காக அவர் தனது அந்தஸ்து, கௌரவம் என்பனவற்றை எல்லாம் விட்டுக் கொடுத்து கெஞ்ச வேண்டியிருந்தது. ஆனால் அது கூட ஏற்றுக் கொள்ளப்படவில்லை. கண்ணீர் சிந்த ஹேமா வீடு திரும்ப வேண்டியிருந்தது.

இவ்வாறு நடந்த பின்னும், மீண்டும் ஹேமா பிரேமதாசா தனது அரசியல் அபிலாசைகளை கைவிட்டு விட்டதாக இல்லை. ஐ. தே. க. விற்காக இரகசியமாகத் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுவதாகவே தகவல்கள் தெரிவிக்கின்றன. இது ஐ. தே. க கொள்கையில் ஊறித்திளைத்ததினால் அல்ல. ஆட்சியில் என்றோ ஒரு நாளாவது இடம் பிடித்துவிடவேண்டும் என்ற அபிலாசையினாலேயே ஆகும்.

இதே சமயம் டி. பி. விஜேதுங்காவும் இதற்கு இணையாகவே செயற்படுகின்றார். ஆரம்பத்தில் ஹேமாவை ஓரங்கட்ட முனைந்த அவர் பின்னர் சேர்த்துக் கொள்ளமுயல்கிறார். இது பிரேமதாசா குடும்பத்தில் உள்ள பற்றினால் அல்ல என்பது சகலருக்கும் தெரியும். பிரேமதாசாவின்பெயரைச்சொல்லிபெறக்கூடிய வாக்கிற்காக மட்டுமே இந்த உறவாகும்.

இந்நிலையில், கட்சிகளின் கொள்கைகளுக்காகவும் கோட்பாட்டிற்காகவும் உழைப்பவர்கள் மற்றவர்களுடன் மோதிக் கொள்பவர்கள். ஏதுமறியாத் தொண்டர்களே ஆகும். இவர்கள் அப்பாவிகள். அரசியல்வாதிகளின் சுகபோக வாழ்விற்காக தமது இரத்தத்தையும், வியர்வையையும் சிந்துபவர்கள்.

இன்று எதிரிகள் போல் காணப்படும் அரசியல்வாதிகள் நாளை கட்டி அணைத்துக் கொள்பவர்கள் ஆனால், இவர்களின் வெற்றிக்காக உழைத்த தொண்டர்களால் அது முடியாது. அவர்கள் உணர்ச்சி பூர்வமானவர்கள். கட்சிக்காக உழைத்து நொந்து போய் இருப்பவர்கள். ஒருவகையில் பாதிக்கப்பட்டவர்கள். மறுபக்கம் அரசியல்வாதிகளின் சித்து விளையாட்டுகளால் ஏமாற்றப்பட்டவர்கள் / ஏமாற்றப்படுபவர்கள். இதனை இவர்கள் புரிந்து கொள்ளாதவரை அசியல் வாதிகளின் இந் நடவடிக்கைகளும் தொடர்ந்து கொண்டே செல்லும்.

ஆட்சிக்கு வந்தால் எமது கடந்த ஆட்சியில் ஏற்பட்ட நிலை மீண்டும் வருமா என பலர் கேட்கின்றனர். அந்த யுகம் வராது. எமது சூழ்நிலைக் கேற்ப பொருளாதார முறைமை ஒன்றை உருவாக்க முடியும்.

கடந்த 17 வருடங்களாக உலகவங்கி இலங்கையில் சுதந்திரக்கட்சி என்று ஒன்று இருக்கிறதா என பார்க்கவில்லை. ஆனால் அண்மையில் சிறிமாவோவை உலகவங்கி குழுவினர்

## இரவில் கற்க வெளிச்ச வசதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகாவித்தியாலயத்தில் மாணவர்கள் தினமும் இரவில் 'பெற்றோமக்ஸ்' வெளிச்ச வசதியுடன் கல்வி கற்று வருகின்றனர். மாலை 6-30 மணி தொடக்கம் இரவு 9-30 மணி வரை நடைபெறும் இக் கற்றலினால் வித்தியாலயத்தைச் சேர்ந்தவர்களும், வித்தியாலய சுற்றாடலைச் சேர்ந்த பிறமாணவர்களுமாக சுமார் நூறு பேர் வரை பயனடைந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (22)

## தேர்தல் ஆணையாளர்மீது குற்றச்சாட்டு

தீவுப்பகுதிகளில் தங்கள் பிரசாரத்துக்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்து தரப்படவில்லையென ஈ. பி. ஆர். எல். எவ். தேர்தல் ஆணையாளரை குற்றஞ்சாட்டியுள்ளது.

தேர்தல் காலத்தில் பொலிசார் அனுப்பப்படுவர் எனக் கூறப்பட்டாலும் அது சரிவர நிறைவேற்றப்படவில்லை. தீவுப் பகுதிகளில், தொலைபேசி, போக்குவரத்து வசதிகள் செய்துதர ஒப்புதலளிக்கப்பட்டும் நிறைவேற்றப்படவில்லை.

தேர்தல் தேவைக்கென, துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகளைக் கொண்டு செல்ல, திருகோணமலையிலிருந்து கப்பல் வசதி செய்துதரக் கோரியும் பயனேற்படவில்லை.

சுமார் ஒரு வாரத்துக்கு முன்பே பத்துப் பேருக்கு, கப்பலில் செல்ல இடங்கேட்டும் நான்கு பேர் செல்லவே இடங் கிடைத்தது. ஏனையோர் செல்ல பகீரதப்பிரயத்தனம் எடுக்க வேண்டி இருந்ததுஎனவும் ஈ.பி ஆர்.எல். எவ். தேர்தல் ஆணையாளரை குறை கூறியுள்ளதாக கொழும்பு பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.

அப் பத்திரிகை மேலும் குறிப்பிடுகையில், தீவுப்பகுதிக்கு சென்ற பத்துப் பேரின் நிலைபற்றி தகவல்கள் கிடைக்காமை பெரும் கவலை அளிக்கின்றது. இந் நிலையில் யாழ். மாவட்டத் தேர்தலை ஒத்தி வைக்கக் கோராமல் வேறென்ன செய்ய முடியும் என ஈ. பி. ஆர். எல். எவ் பேச்சாளர் ஒருவர் தெரிவித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

## தீமிதிப்பு

கந்தர்மடம் உதய நாக பூசணி அம்பாள் ஆலயத்தில் எதிர்வரும் வெள்ளி காலை 10 மணிக்கு விசேடபூசையும் மாலை தீமிதித்தலும் இடம் பெறும்.

## அதிகாரிகள் அசட்டை; பலருக்குப் பாதிப்பு

அபராதம் கட்டத் தவறியதனால் சிறைவாசம் அனுபவிக்கும் ஆயிரக்கணக்கானோரை விடுதலை செய்யும் வகையில், பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மசோதா ஒன்று அதிகாரிகளின் அசமந்தப் போக்கினால் காலாவதியாகியுள்ளது. இதனால் விடுதலை செய்யப்பட வேண்டியவர்கள் தொடர்ந்தும் சிறையிலிருப்பதோடு, அவர்களுக்கான செலவினமாக மில்லியன் கணக்கான ரூபா செலவிடப்பட்டும் வருகிறது.

## மாத்தளை பொலிசார் மீது பொ. ஐ. மு. சீற்றம்

(கொழும்பு)

மாத்தளை மாவட்டத்தில் பொலிசார் கட்சி சார்பாக நடப்பதாகவும் எனவே மாத்தளை மாவட்டத்திலுள்ள அனைத்து பொலிசாருக்கும் எதிராக தேர்தல் விதிகளின் கீழ் வழக்கு தாக்கல் செய்ய திட்டமிட்டுள்ளதாக பொதுஜன ஐக்கிய முன்னணியினர் தெரிவித்துள்ளனர்.

பொதுஜன ஐக்கிய முன்னணி மீது ஐக்கிய தேசியக் கட்சியினர் மேற்கொள்ளும் வன்முறைகளுக்கு எதிராக பொலிசார் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் ஆனால் பொதுஜன ஐக்கிய முன்னணி ஆதரவாளர்கள் மீது மாத்தளை மாவட்ட பொலிசார் பாரபட்சமான நடவடிக்கை எடுப்பதாகவும் அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

## நெடுந்தீவு வேட்பாளர் அனலைதீவில் தஞ்சம்

### ஈ. பி. ஆர். எல். எவ். கவலை

(கொழும்பு)

நெடுந்தீவில் வசித்து வரும் எமது வேட்பாளர் ஒருவர் தற்போது கடற் படையினருக்குச் சமீபமாக அனலைதீவில் வசிக்க வேண்டிய நிலை தீவுப் பகுதிகளில் நிலவுவதாக ஈ.பி.ஆர்.எல்.எவ் தெரிவித்துள்ளது.

தீவுப்பகுதிகளில் ஈ.பி.டி.பி. யினர் ஆயுதங்களுடன் நடமாடுவதால் வேட்பாளர்கள் சுதந்திரமாக செல்ல முடியவில்லை- நயினாதீவில் ஈ.பி. டி.பி. யினர் மட்டுமேயுள்ளனர்- அங்கு நாங்கள் செல்ல முடியவில்லை- இந் நிலையில் பன்னிரண்டு மணிநேர ஊரடங்கும் மாலை ஆறு மணியிலிருந்து ஒவ்வொரு நாளும் பிறப்பிக்கப்பட்டுள்ளது- போக்குவரத்து வசதிகள் கூட இல்லை- இந் நிலையில் தேர்தல் கண்காணிப்பாளர்கள் எவ்விதம் செயலாற்றப்போகிறார்கள் எனவும் ஈ.பி.ஆர். எல்.எவ். கேள்வி எழுப்பியுள்ளது என தெரிய வருகிறது-

# ஹெய்ட்டிமீதுபடையெடுப்பு; அமெரிக்காவுக்கு அனுமதி

(வாஷிங்டன்)

ஹெய்ட்டி தீவில் இராணுவ அரசை கவிழ்க்க அமெரிக்கத் தலைமையிலான ஐ நா படை தலையீட்டிற்கு ஐ. நா. பாதுகாப்பு சபை அங்கீகாரம் அளித்துள்ளது பதவி நீக்கப்பட்ட ஜனாதிபதி அரீஸ்டீட்டை மீண்டும் பதவியில் அமர்த்தவே இந்த இராணுவ நடவடிக்கைக்கு ஐ. நா பாதுகாப்பு சபை அங்கீகாரம் அளித்துள்ளது.

இத்தீர்மானம் பாதுகாப்புச்சபையில் 12 - 0 என்ற வாக்களிப்பில் நிறைவேறியது சீனாவும் பிரேசிலும் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

ஹெய்ட்டி இராணுவ ஆட்சியாளர்கள் பதவி துறக்காவிடின் படையெடுப்பு தவிர்க்க முடியாது என அமெரிக்கா தற்போது எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளது. இராணுவ ஆட்சியாளர்கள் பதவி துறக்காவிடின் துறக்கவைக்கப்படுவர் என அமெரிக்கா தனது எச்சரிப்பில் சுட்டிக்காட்டியுள்ளது. இந்நடவடிக்கையை அமெரிக்காவில் அஞ்ஞாத வாசம் புரியும் ஜனாதிபதி அரிஸ்டீட் வரவேற்றுள்ளார்.

எனினும் இம்முடிவை ஆர்ஜன்டீனா தவிர்ந்த பெரும்பான்மையான தென் அமெரிக்க நாடுகள் எதிர்த்துள்ளன ஹெய்ட்டிக்கு அமெரிக்க தலைமையிலான 6000 பேர் கொண்ட ஐ. நா படை செல்லும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# மண்டைதீவு இராணுவம் தாக்குதல் இருமீனவர்பலி;ஒருவர்உயிர்தப்பினார்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுக் கடற்பரப்பில் கடற்தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மீனவர்களை நோக்கி சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட 50 கலிபர்த் துப்பாக்கிப் பிரயோகத்தில் இரு மீனவர்கள் கொல்லப்பட்டனர். மற்றொருவர் காயங்கள் எதுவுமின்றி உயிர் தப்பித்துக் கொண்டார்.

நேற்று அதிகாலை 12.30 மணியளவில் மேற்படி கடற்பரப்பில் கடற்தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மூன்று மீனவர்களைக் கொண்ட ஒரு மீன்பிடி வள்ளத்தின்மீது சிறுத்தீவிற்கு பின்புறமாக மண்டைதீவுச் சந்தியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

சுமார் அரைமணித்தியாலங்கள் இடைஇடையே மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலினால் அடைக்கலசாமி அன்ரனி (வயது 28, தண்ணீர்த் தாங்கி றோட், குருநகர்) என்பவர் தலையில் பலத்த காயமடைந்த நிலையில் கபிரியல் ரஞ்சன் என்பவரினால் நீந்திக் கரைக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டு அங்கு மரணமானார்.

மற்றைய மூன்றாவது மீனவரான இந்திரன் (வயது 20 குருநகர்) என்பவர் வள்ளத்திற்குள் காயமடைந்த நிலையில் கடலில் குதித்தார். பின்பு நேற்று மாலை இவரது சடலம் குருநகர் பகுதியில் கரைஒதுங்கியது.

இவர்கள் பயன்படுத்திய வள்ளம் பின்னர் கரைக்குக் கொண்டுவரப்பட்டது எனினும் இவர்கள் 12 வலைகளைக் கடலில் இழந்துள்ளதாக தெரிவித்தனர். (பா,21)

# ஒளிபாய்ச்சிய மறுகணம் படையினர் சரமாரியாக எம்மைநோக்கி சுட்டனர்

## தப்பி வந்த மீனவர் தகவல்

(யாழ்ப்பாணம்)

''நேற்று அதிகாலை 12,30 மணியளவில் நாங்கள் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை எமது படகை நோக்கி ஒளியைப் பாய்ச்சிய படையினர் மறு நிமிடம் எமது படகை நோக்கி சரமாரியாகச் சுட்டனர்''.

இவ்வாறு நேற்று அதிகாலை மண்டைதீவுக் கடற்பரப்பில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளை சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட தாக்குதலிற்கு இலக்காகி உயிர்தப்பித்துக் கொண்ட கபிரியல் ரஞ்சன் நமது நிருபரிடம் சம்பவம் பற்றி விபரிக்கையில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் சிவப்பு நிற தீப்பிளம்புகளாக சன்னங்கள் எமது படகை நோக்கி வந்து வீழ்ந்தன- உடனே நாங்கள் மூவரும் கடலில் குதிக்க முயன்ற வேளை என்னுடன் இருந்த இருவரும் காயமடைந்தனர்- மறுகணம் மூவரும் கடலில் குதித்தோம்-

இதில் தலையில் காயமடைந்தவரான அடைக்கலசாமி அன்ரனியை இழுத்தவாறு நான் நீந்திக்கரைக்குக் கொண்டுவந்து சேர்த்தேன்- பின்னர் அவர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு இறந்து விட்டார்-

மற்றவரான ராசக்கோன் ஐஸ்ரின் காயமடைந்த நிலையில் கடலில் குதித்தவர் தான் எங்களுடன் கரைக்கு வந்து சேரவில்லை என்றார்-

மேலும் 12 வலைகளை நாங்கள் கடலிற்கு எடுத்துச் சென்றிருந்தோம். இவற்றையும் நாம் இழந்துள்ளோம்- ஆனால் படகு மட்டும் பின்னர் எம்மவர்களினால் கரைக்குக் கொண்டுவந்து சேர்க்கப்பட்டுள்ளது என தெரிவித்தார்- (பா),(21)

## காரைநகரிலிருந்து எறிகணை வீச்சு

(தொல்புரம்)

காரைநகரில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா ஆயுதப் படையினர் நேற்று முன்தினம் நள்ளிரவு 11.20 மணியளவில் தமது காவல் நிலைகளிலிருந்து பொன்னாலை, மூளாய் பகுதிகளை நோக்கி பலத்த எறிகணை வீச்சினையும், கலிபர் தாக்குதலையும் மேற்கொண்டனர்-

இதேவேளை தீவகப் பகுதிகளிலிருந்தும் பலத்த கலிபர் தாக்குதல் மேற்படி பகுதிகளை நோக்கி மேற் கொள்ளப்பட்டது. சுமார் ஒரு மணிக்குமேல் இடம்பெற்ற இத் தாக்குதல் சம்பவங்களினால் மக்கள் இரவுப் பொழுதை சற்று பதற்றத்துடன் கழித்தனராயினும் உயிர்ச்சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை எனத் தெரிய வருகின்றது. (41)

## இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

எரிந்து கொண்டிருந்த அரிக்கன் லாம்பினுள் தின்னர் கலந்த மண்ணெண்ணெயை விட்டபோது லாம்பு குபீரென பற்றி எரிந்து வெடித்துச் சிதறியது.

இச்சம்பவத்தில் கொக்குவில் பகுதியிலுள்ள கோணாவளையைச் சேர்ந்த இருவர் காயமடைந்தனர். பொன்னுத்துரை பிரபாகரன் (வயது 25) அவர் மனைவி குணாளினி பிரபாகரன் (வயது 23) ஆகியோரே காயமடைந்தவராவர். (88)

## நோயாளர் கவனத்திற்கு

(குருநகர்)

நாளை வியாழக்கிழமை கொழும்பு செல்வதற்கு தெரிவு செய்யப்பட்ட நோயாளர்களையும் கூடச் செல்பவர்களையும் இரண்டு நாட்களுக்குத் தேவையான உணவு மற்றும் தண்ணீர் ஆகியவற்றுடன் அன்றைய தினம் காலை 9-மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலைக்கு வருமாறு பணிப்பாளர் கேட்டுள்ளார். (21)

# பலாலி தளத்தைசூழவுள்ள பகுதியில் அகோர விமானக் குண்டுவீச்சு

பலாலி விமானப்படை தளத்தைச் சூழவுள்ள பகுதிகள் மீது சிறிலங்கா விமானப் படையினர்அகோரக் குண்டுத் தாக்குதல்களை நடாத்தியுள்ளனர். நேற்று அதிகாலை முதல் சில மணி நேரங்கள் தொடர்ச்சியாக இக் குண்டுத் தாக்குதல்கள் நடைபெற்றன. அதிகாலை 4.30 மணியளவில் விமானப்படைத் தளத்தை பல தடவைகள் வட்டமிட்ட இரு புக்காரா விமானங்கள் ஆங்காங்கே குண்டுகளைவீசித்தாக்குதலை நடத்திய வண்ணமிருந்தன அத்துடன் உலங்குவானூர்தி ஒன்றும் அங்கும் இங்குமாகப் பறந்து வேட்டுக்களைத் தீர்த்தவண்ணமிருந்தது

இதைவிட மேற்படி முகாமில் இருந்து எறிகணைத்தாக்குதல்களும் நடாத்தப்பட்டன இத்தாக்குதல்களால் ஏற்பட்ட சேதவிபரங்கள் குறித்து உடனடியாகத் தகவல்களைச்சேகரிக்க முடியவில்லை

# ராணுவ தளபதியிடம் பூரண அறிக்கை பாதுகாப்பு அமைச்சு கோருகிறது

(கொழும்பு)

பலாலி இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியது சம்பந்தமாக பூரண அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு பாதுகாப்பு அமைச்சு இராணுவத் தளபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை வடபகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் பொதுத் தேர்தல் சம்பந்தமான ஏற்பாடுகளை சீர்குலைப்பதே விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதற்கான நோக்கமாக இருக்கலாம் எனவும் பாதுகாப்பு அமைச்சு விடுத்துள்ள செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கரும்புலிகளின் ஊடுருவல்; ராணுவ வட்டாரத்தில் பேரதிர்ச்சி

(கொழும்பு)

கரும்புலிகள் பலாலி விமானப்படைத் தளத்தினுள் மையப் பகுதி வரை ஊடுருவியமை சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சி ஏற்படுத்தியுள்ளதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

சிறிலங்காவின் மிகவும் பாதுகாப்பான கூட்டுப்படைத்தளங்களில்ஒன்றான விமானபடைத்தளத்தினுள் கரும்புலிகள்ஊடுருவியமையானது ஆச்சரியம் அளிக்கக்கூடிய தொன்று எனவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

## கூட்டுறவாளர் தின விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை நடாத்தும் '72-வது சர்வதேச கூட்டுறவாளர் தின விழா' எதிர்வரும் 6-ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் சபைத் தலைவர் திரு. வை. செந்திநாதன் தலைமையில் நடைபெறும் என மேற்படி சபை அறிவித்துள்ளது-

## மன்னார்தீவு செல்லும் பயணிகள் கடும் சோதனை

கற்பிட்டிக்கும் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள மன்னார் தீவுக்கும் இடையிலான படகு சேவையில் பயணம் செய்பவர்கள் மீது கடற்படையினர் கெடுபிடியான சோதனைகள் மேற்கொண்டு வருவதாகக் கூறப்படுகிறது தமிழ்ப் பயணிகள் தாழ்வுபாடு துறையில் படகுகளில் ஏறுவதற்கு முன்பாக அவர்களது உடைமைகள் கடுமையான சோதனைக்கு உள்ளாக்கப்படுவதுடன் உள் ஆடைகள் உட்பட அகற்றப்பட்டு முழுமையான சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர். இச்சோதனைகளில் வாடிக்கையாக பயணம் செய்பவர்கள், வர்த்தகர்கள், பெண்கள் என எவருக்கும் விதிவிலக்கு அளிக்கப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## யாழ். நல்லூர் வணிகர் கழகங்கள் விடுக்கும் முக்கிய அறிவித்தல்

கடந்த மாதம் நடைபெற்ற யாழ். நல்லூர் வணிகர் கழகத்திற்குட்பட்ட உணவகங்களின் உரிமையாளர்களுடனான கலந்துரையாடலின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய ''எமது பாரம்பரிய பண்பாட்டு உணவுகளை'' மக்களுக்கு அறிமுகப்படுத்தும் நோக்கில் உள்ளூர் தானியங்கள் மூலம் தயாரிக்கப்பட்ட உணவு வகைகளை உங்கள் உணவகங்களில் ஒவ்வொரு புதன்கிழமை தோறும் தயாரித்து விற்பனை செய்யுமாறு வேண்டப்படுகின்றீர்கள். அத்துடன் இவற்றை கண்காணிக்க வரும் கண்காணிப்பு குழுவிற்கு உங்கள் ஒத்துழைப்பினை வழங்குமாறும் கேட்டுக்கொள்கின்றோம். உணவு தயாரிப்புக்கு தேவையான உள்ளீட்டு பொருட்களை பின்வரும் வணிக நிலையங்களில் நியாய விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

## விமானத்தளம்

இது குறித்து சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கையில் பலாலி இராணுவ முகாமில் விமானங்கள் நிறுத்தி வைக்கப்படும் பகுதியினுள் விடுதலைப் புலிகளின் தற்கொலைப்படையினர் ஊடுருவி தாக்குதல் நடாத்தியதாக கூறியது.

பலாலி இராணுவ தளம் மீது நேற்று அதிகாலை 2.45 மணியளவில் தற்கொலைப் படை என நம்பப்படும் குழு தாக்குதல்நடாத்தியது. கடல் மார்க்கமாக இவர்கள் உள்பிரவேசித்திருக்கலாம் என பாதுகாப்பு அமைச்சின் நடவ

## தடகள விளையாட்டிற்கு விண்ணப்பிக்கலாம்

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் இவ்வாண்டு மாபெரும் விளையாட்டு விழா நடாத்தப்படவுள்ளது. இதில் தடகள விழாவுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப் போட்டிகள் வலயரீதியாக நடாத்தப்பட்டு அதில் வெற்றி பெற்றவர்கள் மாவட்ட போட்டிகளுக்கு தகுதிபெறுவார்கள்- வலிகிழக்கு வலயத்தில் கோப்பாய், நல்லூர், யாழ்ப்பாணம் பிரிவுகளும் வலிமேற்கு வலயத்தில் சங்கானை, சண்டிலிப்பாய், தெல்லிப்பளை,

## பிரதேசசெயலர் அலுவலகம் விரைவில் இடம் மாறும்

(யாழ்ப்பாணம்)

வேலணை, ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுகளின் அலுவலகம் விரைவில் யாழ். செயலகத்தில் முன்பு இயங்கிய அதே இடத்தில் இயங்கவுள்ளது. தற்போது சுபாஸ் ஹோட்டல் விடுதியில் இயங்கி வரும் இந்த அலுவலக விமானப்படையின் 'சுப்பர் சொனிக்' குண்டுவீச்சு விமானம் செயலகத்தில் குண்டுத் தாக்குதலை நடாத்தியதைத் தொடர்ந்து அங்கு இயங்கி வந்த மேற்படி பிரிவுகளின் அலுவலகம் சுபாஸ் ஹோட்டல் விடுதிக்கு மாற்றப்பட்டது. இன்னும் ஒரிரு வாரத்தி

உணவு வகைகளை உங்கள் உணவகங்களில் ஒவ்வொரு புதன்கிழமை தோறும் தயாரித்து விற்பனை செய்யுமாறு வேண்டப்படுகின்றீர்கள். அத்துடன் இவற்றை கண்காணிக்க வரும் கண்காணிப்பு குழுவிற்கு உங்கள் ஒத்துழைப்பினை வழங்குமாறும் கேட்டுக்கொள்கின்றோம். உணவு தயாரிப்புக்கு தேவையான உள்ளீட்டு பொருட்களை பின்வரும் வணிக நிலையங்களில் நியாய விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

★ குலசி வாணிபம்
பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு

★ அம்பாள் ப. ச. மாளிகை
திருநெல்வேலி,

★ உதயம்
பல்பொருள் வாணிபம்
யாழ்ப்பாணம்.

யாழ். பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற உணவக முகாமைத்துவ கற்கை நெறியில் கலந்து கொள்ள உணவக உரிமையாளர்கள் தங்கள் பெயர்களை எதிர் வரும் வியாழக்கிழமைக்கு (4-8-94) முன்னதாக வணிகர் கழகத்தில் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி.

**யாழ் நல்லூர் வணிகர் கழகங்கள்.**

(சி-10030)

# விசேட பொதுக்கூட்டம்

## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் - யாழ் மாவட்டம்

**இடம்:** விஞ்ஞான கல்வி நிலையம், யாழ்ப்பாணம்
(எழிலகம் முன்பாக)

**காலம்:** இன்று (3-ம் திகதி) புதன் காலை 10 மணி

மிக முக்கியமான விடயங்கள் பற்றி விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் தெளிவுபடுத்த உள்ளனர்.

தொடர்ச்சியாக 3 (மூன்று) கூட்டங்களுக்கு மேல் சமுகம் கொடுக்காதவர்களின் உறுப்புரிமை நீக்கப்படும் என்பதையும் இக்கூட்டத்தின் முக்கியத்துவத்தையும் உணர்ந்து தவறாது சமுகமளிக்கவும்.

குறிப்பு: பொது நிர்வாகசபை உறுப்பினர்கள் அன்று காலை 9 மணிக்கே சமுகம் தரவும்.

பொதுச்செயலாளர்
யாழ் மாவட்டம்

(சி/10031)

மீது நேற்று அதிகாலை 2.45 மணியளவில் தற்கொலைப் படை என நம்பப்படும் குழு தாக்குதல்நடாத்தியது. கடல் மார்க்கமாக இவர்கள் உள்பிரவேசித்திருக்கலாம் என பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கை தலைமை அதிகாரி பிரிகேடியர் ஜே. பி குலதுங்க சிறிலங்கா வானொலிக்கு தெரிவித்தார்.

புலிகள் சிறு ஆயுதங்கள், ரொக்கட் செலுத்திகள், சிறு பீரங்கிகள் ஆகியவற்றை இத் தாக்குதலில் பயன்படுத்தியதாக பிரிகேடியர் குலதுங்க மேலும் தெரிவித்தார்.

படையினரின் வசமுள்ள பகுதியில் இன்னும் சிக்கியுள்ள புலிகளைகண்டுபிடித்து அவர்களை அழிக்கும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்-

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

### 1994-08-03 புதன் இரவு

08.01- குயிலோசை ''களத்தில் காத்தான்''-சிந்துநடைக் கூத்து அங்கம் -4
08.20- ஏர்முனை ''வேம்பிலிருந்து நாசினிகள்'' உரைச் சித்திரம்
08.30- செய்திகள்
08.40- நாடகம் ''காணி நிலம் வேண்டும்''

### 1994-08-04 வியாழன் காலை

07.02- மாவீரவணக்கம்
07.15-விடுதலை கீதங்கள்
07.30-செய்திகள்
07.35-பத்திரிகைச் செய்திகள்
07.40-விடுதலை கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் இவ்வாண்டு மாபெரும் விளையாட்டு விழா நடாத்தப்படவுள்ளது. இதில் தடகள விழாவுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப் போட்டிகள் வலய ரீதியாக

[illegible] இதில் வெற்றி பெறுபவர்கள் மாவட்ட போட்டிகளுக்கு தகுதிபெறுவார்கள்- வலிகிழக்கு வலயத்தில் கோப்பாய், நல்லூர், யாழ்ப்பாணம் பிரிவுகளும் வலிமேற்கு வலயத்தில் சங்கானை, சண்டிலிப்பாய், தெல்லிப்பளை. உடுவில் பிரிவுகளும், தென்மராட்சி வலயத்தில் தென்மராட்சி தீவகப் பிரிவுகளும், வடமராட்சி வலயத்தில் கரவெட்டி, பருத்தித்துறை, மருதங்கேணிப் பிரிவுகளும் பங்குபற்றலாம்- இதில் வெற்றிபெறும் வலயங்களுக்கு தியாகி திலீபன் நினைவுக் கேடயங்கள் வழங்கப்படவுள்ளன-

தடகள போட்டிகளுக்கான விண்ணப்பங்களை அவ்வப் பிரிவு வட்ட விளையாட்டு இணைப்பாளர்களிடம், சழக ரீதியாக. அல்லது தனிப்பட்ட ரீதியாக 09·08-94க்கு முன்னதாக ஒப்படைக்குமாறு யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு கேட்டுக்கொள்கின்றது- மேலதிக விபரங்களுக்கு செயலாளர், யாழ்- மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக்குழு, யாழ் மாவட்டச் செயலகம் கோண்டாவிலில் தொடர்பு கொள்ளுமாறு அறியத்தரப்பட்டுள்ளது-

### குறுக்கும்

புக்காரா குண்டு வீச்சு விமானம் ஒன்றும் அவ்ரோ விமானம் ஒன்றும் இவ்வாறு சுற்றிச் சுழன்று பறந்தன.

சில விமானங்கள் பலாலி இராணுவ முகாம் பகுதியில் இருந்து தென் பகுதி நோக்கி விரைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (தி)

### பலாலி

ளால் இதுபோன்ற தாக்குதல்கள் தொடர்ந்து நடத்தப்படும் சாத்தியங்கள் இருப்பதால் எச்சரிக்கையாக இருக்கும்படி பாதுகாப்பு அமைச்சு படையினரைப் பணித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### நேர்முகப்

தாரிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கான நியமனக் கடிதங்களை அரச அதிபர் எடுத்துவரவுள்ளதாக தெரியவருகின்றது.

இதேவேளை யாழ் மாவட்டத்திலுள்ள ஆசிரிய வெற்றிடங்கள் தொடர்பாக அரச அதிபர் கல்வி அமைச்சுக்கு தெரிவித்ததாகவும் அதையடுத்து 142 பட்டதாரிகளுக்கு கல்வி அமைச்சிலிருந்து அனுமதிக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

மேற்படி யாழ் செயலகத்தில் நடைபெற்ற நேர்முகப் பரீட்சைக்கு 600 பேருக்கு மேற்பட்டோர் தோற்றியிருந்த போதிலும் அவர்களுள் இறுதிவருடம் பரீட்சை எழுதிவிட்டு பெறுபேறுகள் கிடைக்காத நிலையில் 200க்கும் மேற்பட்டோர் தோற்றியதாகவும் இவர்கள் தவிர அநேகமாக ஏனையோருக்கு நியமனங்கள் தற்போதுகிடைத்துள்ளதாகவும் மேலும்தெரியவருகின்றது. (சி), (பா)

## பெருமளவு கூட்டமில்லை

(கொழும்பு)

பலாங்கொடயில் நேற்று நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சி பொதுக் கூட்டத்தில் மூவாயிரம் வரையிலான பொதுமக்கள் மட்டுமே கலந்துகொண்டதாக நேற்று மாலை கிடைத்த தகவல் தெரிவிக்கின்றது.

இக் கூட்டத்தில் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா கலந்து கொள்ள இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை சென்ற 30ம் திகதி இதே இடத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் சார்பில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் முப்பதாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டதாக அத் தகவல் மேலும் தெரிவிக்கின்றது.

(யாழ்ப்பாணம்)

வேலணை, ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுகளின் அலுவலகம் விரைவில் யாழ். செயலகத்தில் முன்பு இயங்கிய அதே இடத்தில் இயங்கவுள்ளது. தற்போது சுபாஸ் ஹோட்டல் விடுதியில் இயங்கி வரும் இந்த அலுவலகம் 1991 அக்டோபர் தொடக்கம் செயலகத்தின் ஒரு பகுதியில் இயங்கி வந்தது. ஆயினும் 1993நவம்பரில் சிறிலங்கா விமானப் படையின் 'சுப்பர் சொனிக்' குண்டு வீச்சு விமானம் செயலகத்தில் குண்டுத் தாக்குதலை நடாத்தியதைத் தொடர்ந்து அங்கு இயங்கி வந்த மேற்படி பிரிவுகளின் அலுவலகம் சுபாஸ் ஹோட்டல் விடுதிக்கு மாற்றப்பட்டது இன்னும் ஒரிரு வாரத்திற்குள் மீண்டும் செயலகத்தில் அதே பகுதியில் இவை இயங்கவுள்ளதாக தெரியவருகிறது. (22)

## சாவகச்சேரி குடும்பஸ்தர் சுவிஸ் விபத்தில் பலி

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரியைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் சுவிட்சர்லாந்தில் இடம் பெற்ற வாகன விபத்து ஒன்றில் மரணமானார். சாவகச்சேரி தாமோதரம்பிள்ளை வீதியைச் சேர்ந்த சபாபதி மதன்ராஜ் (வயது 34) என்னும் இரு பிள்ளைகளின் தந்தையே மரணமானவராவார். (88)

## சாம்சன் குடியிருப்பில் தனித்தனி குடிசைகள்

அரியாலை சாம்சன் குடியிருப்பைச் சேர்ந்த தீவக மக்களுக்கென புதிதாக தனித் தனிக் குடிசைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. குடியிருப்பின் எதிரே, வீதியின் மறுபுறத்தில் உள்ள வளவொன்றில் 24 குடிசைகளும் மணியரசன் குடியிருப்பிற்கு அருகே 42 குடிசைகளும், குடியிருப்பின் மேற்குப்புறத்தில்34 குடிசைகளும் புதிதாக அமைக்கப்பட்டு வருகின்றன. புதிய வீடுகளில் குடியேறவுள்ள மக்களுக்கென மலசலகூடம் மற்றும் குடிதண்ணீர் வசதிகளும் செய்து கொடுக்கப்படவுள்ளதாக குடியிருப்பு நிர்வாகத்தினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால் பராமரிக்கப்பட்டுவரும் சாம்சன் குடியிருப்பு மக்கள் முன்னர் மழை நாட்களில் பெரும் அவலங்களை சந்தித்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (22)

## பொது ம. ஐக்கிய முன்னணி வன்முறைக்குத் தூபம்

பொதுஜன ஐக்கிய முன்னணி தொடர்ந்து வெளியிட்டு வரும் வன்முறை தொடர்பான செய்திகளினால் நாட்டை ஓர் அமைதியான நிலையில் வைத்திருக்க முடியாத சூழ் நிலை ஏற்படும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் காமினி விஜேசேகர தெரிவித்துள்ளார்-

வன்முறைகளுக்குத் தூபமிடும் வகையில் மக்களைஏவி விடுவதற்காக இவ்வாறான செய்திகளை பொதுஜன ஐக்கிய முன்னணி வெளியிடுவதாகவும் இது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது என்றும் தேர்தல் நியமனப் பத்திரம்தாக்கல்செய்த தினத்தில் இருந்து இன்றுவரை ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர் ஐவர் பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆதரவாளரின் தாக்குதலினால் மரணம் அடைந்துள்ளனர் எனவும் தெரிவித்துள்ளார்-

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 03ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது